# சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆனி 5ல (18-6-72) ஞாயிறு 1391 ஐ: அவ் 6 புத்தகம் 25 இதழ் 30


## துரோகிக்கு மரண தண்டனை!

வங்கதேச மக்களின் விடுதலை இயக்கத்திற்கு துரோகமிழைத்து பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் அவர்களைக்காட்டிக்கொடுத்த குற்றத்துக்காக முதலாவது மரணதண்டனையை சுதந்திர வங்கத்தின் நீதிபதி ஆர். கே. விஸ்வாஸ் விதித்துள்ளார். சிகோன் அலி என்ற நபரை தூக்கிலிடும்படி நீதிபதி உத்தரவிட்டார். முதலாவது மரணதண்டனையை வழங்கிய நீதிபதி விஸ்வாஸ் ஒரு இந்து என்பதும் குறிப்பிடத்தக்கது. •

# தமிழர் கூட்டணிச் செயலாளர்
# காசி ஆனந்தன் கைதானார்!

## சிரித்த முகத்துடன் உணர்ச்சிக் கவிஞர் விடைபெற்ற உருக்கமான காட்சி!

தமிழர் கூட்டணியின் இணைச் செயலாளர்களில் ஒருவரும் தமிழரசுக்கட்சியின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவருமான உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இத்திங்கள் 10ம் நாள் இரவு மன்னாரில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

மன்னாரில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்றிருந்த கவிஞரை கூட்ட மேடையில் வைத்து பொலிசார் கைது செய்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் 'தமிழ் வாழ்க' என்று உணர்ச்சிவசப்பட்டு குரலெழுப்ப, கவிஞர் அவர்கள் சிரித்த முகத்துடன் பொலீஸ் அதிகாரிகளுடன் சென்றார்.

வெளிவிவகாரபாதுகாப்பு அமைச்சின் நிரந்தர செயலாளரின் உத்தரவின்படியே மன்னார் பொலிசார் கவிஞரை கைது செய்ததாக அறியப்படுகிறது. •



மன்னாரில் கைது செய்யப்பட்ட கவிஞர் மறு நாள் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு திங்கட்கிழமை (12. 6. 72) காலை யாழ்தேவியில் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார். இப்போது அவர் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. கவிஞர் கைது செய்யப்பட்டு இன்றுடன் (18-6-72) 9 நாட்கள் ஆகின்றன.

கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் தமதுஅனல்கக்கும் பேச்சாலும், கவிதைகளாலும் அரசாங்கத்தின் தமிழ் விரோதப் போக்குகளையும், புதிய அரசியல் சட்டத்தையும் கடுமையாகச் சாடி வந்தது தெரிந்ததே. கவிஞரின் சொல்லம்பினை தாங்க முடியாத தமிழ் துரோகிகள்விழி பிதுங்கி, நடுநடுங்கிப்பதுங்கியிருந்தனர்.

புதிய அரசியல் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்து, கைநிறையச் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர் பதவியையும் குடியரசு நாளன்று உதறியெறிந்து தமிழ் சமுதாயத்திற்கு உணர்ச்சியூட்டியவர் கவிஞர் காசி ஆனந்தன்.

இம்மாதம் 10ம் திகதி மன்னாரில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக்கூட்டமொன்றில் பேசுவதற்காக சென்றி

(7-ம் பக்கம் பார்க்க)

### சென்னையில் கண்டனக் கூட்டம்

இலங்கையில் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் புதியஅரசியல் சாசனம்கொண்டுவரப்பட்டதை எதிர்த்தும் விடுதலைக்குப் போராடும் இலங்கைத் தமிழர்கள் மீது அடக்குமுறைபாவிக்கப்படுவதைக் கண்டித்தும் 22-6-72ம் திகதியன்று சென்னையில் ஒரு சர்வகட்சிப் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இலங்கைத்தமிழர் விடுதலை இயக்கத் தலைவரும் முன்னாள் இ. தி. மு. க. பொதுச் செயலாளருமான திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., இரா. ஜனார்த்தனம், முரசொலி அடியார், என். எம். தயாநிதி உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

## வன்முறை தவிர்ப்பீர்!
### கூட்டணித்தலைவர்கள் வேண்டுகோள்!

"தமிழ் மக்களுக்கு அவர்களின் ஆகக்குறைந்த அடிப்படை உரிமைகளைத்தானும் தர மறுக்கின்ற அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் மீது திணிக்கும் அரசாங்க நடவடிக்கைகளை நாங்கள் கடுமையாக எதிர்ப்பதுடன் தொடர்ந்து எதிர்த்து வருவோம். ஆனால் எமது எதிர்ப்பு எவ்வகையானவன் செயலையும் ஆதரிப்பதாக கொள்ளலாகாது.

பொதுமக்களால் நடாத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படும் வன் செயல்கள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பது எமக்குத் தெரியாது. வன்முறையால் எமது இலட்சியங்களை அடைய முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தூண்டப்பட்டாலும் கூட வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனவும் எமது இலட்சியத்தையடைய உதவும் மார்க்கமாகிய சாத்வீக முறைமீதே நம்பிக்கை வைக்குமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம்."

—இவ்வாறு தமிழர் கூட்டணியின் சார்பில் தந்தை செல்வாவும், தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். சிவசிதம்பரமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## 'புதிய அரசியல் சாசனம் தமிழருக்கு திருப்தி தரவில்லை'
### மூதறிஞர் ராஜாஜி கருத்து!

இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய அரசியல் சாசனம் இலங்கைத் தமிழருக்கு, திருப்தியளிப்பதாக இல்லையென்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கருத்துவெளியிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய அரசியல் சட்டம் சம்பந்தமாக 4-6-72 கல்கி இதழில் ராஜாஜி பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"இந்தியாவைப்போல் குடியரசானு பிறகும் ஸ்ரீ லங்காவும் காமன்வெல்த்துக்குள் இருக்க முடிவு செய்தது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத்தீவில் உள்ள தமிழ் மக்களுக்குப் புதிய சாசனம் திருப்தி தரவில்லை. 1950ல் அமுலான இந்திய அரசியல் சாசனம் எல்லாச் சிறுபான்மையினருக்கும் திருப்தி தந்தது போல் இலங்கையில் ஒரு சாசனம்



நிறைவேற்றப்படும் என நம்புவோமாக."

4-6-72 'கல்கி'யின் ஆசிரியத்தலையங்கத்தில் புதிய அரசியல் திட்டம் பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது:—

"ஸ்ரீலங்காவின் புதிய அரசியல் சாசனத்தில் மனத்தை உறுத்தும் சில அம்சங்கள் காணைப்படுவது துரதிர்ஷ்டமானது. முதலாவதாக அந்த நாட்டு பிரதிநிதிகளின் சபை செய்கிற எந்தச்சட்டத்தையும் நீதி மன்றங்கள் விசாரிக்க முடியாது, என்று விதித்திருப்பது உண்மையான ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல. மக்களின் அடிப்படைஉரிமைகளில் சொத்துரிமைக்கு

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

நூல்:- சேர். பொன். இராமநாதன்
ஆசிரியர்:- மு. வைத்திலிங்கம் பீ. ஏ. (இலண்டன்)
விலை:- ரூபா 30-00
கிடைக்குமிடம்:- 'சாந்தம்' 19, மிலாகிரி அவனியூ, கொழும்பு-4.
(மற்றும் ஈழத்திலுள்ள சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.)



வரலாற்று உணர்ச்சி உரிமைக்கு வித்து என்பது பொருள் பொதிந்த கூற்றாய் இருப்பினும் இந்த உணர்ச்சி பெற்றோர் எம்மிடையே மிகக் குறைவாகவேயிருக்கின்றனர். எனினும் அண்மைக்காலங்களில் ஈழத்தமிழர் வரலாறு பற்றி சில நூல்கள் எழுந்துள்ளன என்பதை யாம் மறுப்பதிற்கில்லை.

இந்த வரிசையில் சேர். பொன். இராமநாதன்பற்றி சாவகச்சேரி இந்துக்கல் லூரி முன்னாள் முதல்வர் திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் வரைந்துள்ள வாழ்க்கை வரலாற்று நூல்—வரலாற்று நூல் என்ற எல்லைக்குள் முற்றாக அடங்காவிடினும் அரை நூற்றாண்டிற்குமேல் இலங்கை வரலாற்றில் தனியிடம் பெற்று தானே புதிய வரலாற்றைத் தோற்றுவித்த இராமநாதனின் வாழ்வையும் பணியையும் யாம் என்றும்போற்றிப் பேணும் முறையில் படைத்திருப்பது பாராட்டுதற்குரியது. இன்றைய சூழ்நிலையில் பயன்பல தருவதாகவும் அமைந்து விளங்குகிறது.

முக்கால் நூற்றாண்டிற்கு மேல் வாழ்ந்து அரை நூற்றாண்டிற்குமேல் ஈழத்து அரசியல் வானில் தனியாட்சி செலுத்திய இராமநாதனைப் பற்றி கால்நூற்றாண்டிற்குமேல் ஆழ்ந்த ஆராய்ச்சிசெய்து இந்நூலை இந்நூலாசிரியர் படைத்திருப்பது இராமநாதனிடம் இவருக்கு இருக்கும் மதிப்பை எடுத்துக்காட்டுவதுடன் இவரின் ஆய்வுத் திறனையும் பொறுமைப்பண்பையும் அழகுற எடுத்துக் காட்டுகிறது.

ஆங்கிலப் புலமைவாய்ந்த அறிஞர் பலர் ஈழத்தில் வாழ்கின்றனர். ஆனால் அவர்களுட் பலர் ஆங்கிலத்தை அழகுடன் கையாளும் திறன் படைத்தவர்களாக விளங்குகிறார்கள் இல்லை. ஆனால் இந்நூலாசிரியரோ ஆங்கிலப்புலமையின் ஊற்றாக விளங்குவதோடு ஆங்கிலத்தை சுவையுடன் பொருட் பொலிவுடன் கையாளும் திறன் பெற்றவராக விளங்குகிறார். இந்நூலின் எவ்விடத்திலாவது ஏற்ற ஆங்கில சொற்றொடர்களுக்கு இவர்தேடி அலைவதற்கு எதுவித சான்றுமில்லை. மாறாக ஆங்கிலம் இவருக்கு பல்துறைகளில் குற்றேவல் செய்யக் காத்திருக்கும் வியத்தகு காட்சியையே யாம் காண்கிறோம். எம்மை மட்டுமல்ல ஆங்கில அறிஞர்களையுமே வியப்பில் ஆழ்த்தும் ஆங்கிலச் சொல்லாட்சி கைவரப் பெற்றவர் இந்நூலாசிரியர் என்பது எம் முடிந்த முடிபு.

600 பக்கங்களுக்கு மேற்பட்ட பக்கங்களைக்கொண்டு இந்நூல் விளங்குகிறதெனினும் பக்கத்திற்கு பக்கம் நூலில் கையாளப்பட்டிருக்கும் சுவை ததும்பும் நடை எம்மை சொக்கவைக்கிறது. எடுத்த நூலை கீழே வைக்க முடியாதஅளவிற்கு எம் உள்ளத்தை ஆட்கொள்கிறது இந்நூல். ஆங்கிலம் உலக அறிவின் திறவுகோல் என்பதை இந்நூல் ஏற்றமுற நிலைநாட்டுகிறது.

முகவுரை முன்னுரை என்று தொடங்கி அரசியற் சட்டத் திருத்தம் பற்றி (1890)ல் இராமநாதன் அனுப்பிய பதிவுக் குறிப்பு பின்னிணைப்புடன் முடிவுறும் இந்நூல் 38 அத்தியாயங்களை தன்னுள் அடக்கி 605 பக்கங்களுடன் விளங்குகிறது.

அவ்வத்தியாயத் தலைப்புகள் அனைத்தையும் இங்கு எழுத்தாளல் இயலாததினால் பின்வரும் சில முக்கிய தலைப்புகள் இங்கு குறிக்கப்பட்டுள்ளன. அவையாவன, பிறப்பும் முன்னோரும், திருமணமும் வழக்குரைஞர் பணியும், சட்ட நிரூபண சபைசெல்லல், முதற்பேச்சு, அரசாங்க ஊழியர்களின் முறைப்பாடுகள், இராமநாதனும் கிறித்தவத் தொண்டர்களும் முகமதிய திருமணப் பதிவுகள், இராமநாதனும் புத்தமதம் பற்றிய சட்டங்கள், சட்டத்துறைப் பணி, ஐரோப்பியப் பயணம் இராமநாதனும் யாழ்ப்பாணம் புகைவண்டிப் பாதையும், சமயவளர்ச்சியாழ்ப்பாணச் சந்தைக் கட்டளைச் சட்டம் இந்தியத் தொழிலாளர் பற்றிய சிக்கல், இலங்கைத் தேசியத்திற்கு அடித்தளம் இடல், லேடி இராமநாதன்; அமெரிக்கப் பயணம், பொன்னம்பலவாணேசர் கோவில், இராமநாதன் கல்லூரி படித்த இலங்கையர் பேராளர் (பிரதிநிதி).

ஒவ்வொரு அத்தியாயத் தலைப்பின் கீழும் இராமநாதன் பண்பை ஏற்றமுற எடுத்துக்காட்ட அவர் கையாளும் பொருத்தமுடைய மேற்கோள்கள் படிப்போர் மனதைக் கவர்வதோடு நூலாசிரியரின் பரந்த நூல் அறிவையும் நினைவாற்றலையும் யாருக்குப் பறைசாற்றுகிறது.

ஒருவரின் ஆளுமையை (Personality) அவரின் எழுத்தின் பேச்சுமே பெருமளவு எடுத்துக் காட்டும் என்ற மரபு வழி உண்மைக்கமைய சேர். பொன். இராமநாதனின் சிந்தனைச் செறிவுமிக்க எழுத்துக்களையும் எழுச்சியூட்டும் பேருரைகளையும் போதியளவு பொருத்தமான இடங்களில் நூலாசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

உலகப் புகழுடன் இலங்கை மக்கள் அனைவரின் நலமும் கருதிப் பணிபுரிந்தவர் சேர். பொன். இராமநாதன் எனினும் தான் தமிழன், தனது மொழி தமிழ், தனது பண்பாடு தமிழ்ப் பண்பாடு தனதுநாகரிகம் தமிழன் நாகரிகம்; தனது வாழ்வியல் முறை தமிழன் வாழ்வியல் முறை இவற்றை எந்தச் சூழ்நிலையிலும் இராமநாதன் இழக்கத் தயாராகயிருக்கவில்லை என்பதை இந்நூலாசிரியர் தகுந்த மேற்கோள்களுடன் ஆணித்தரமான சான்றுகளுடன் எம்மெய்சிலிர்க்க—தமிழ் உணர்ச்சி பொங்க எடுத்துக் காட்டுகிறார்.

அத்துடன் மட்டுமல்ல இராமநாதன் மேல்வகுப்பைச் சார்ந்தவர். அவர் பொதுமக்கள் நலம் கருதி—அவர்களோடு நெருங்கிப் பழகத் தயங்கியவர் என்று சிலர் மனதில் நிலவும் தப்பெண்ணத்தை முற்றாகக் களையும் முறையில் — தூக்கியெறியத்தக்க தன்மையில் இராமநாதன் ஓர் ஏழை பங்காளன் என்பதை ஏதுக்கள் கொண்டு ஏற்றமுற இனிது நிலைநாட்டியுள்ளார்.

1912 ஆண்டை உள்ளடக்கி படித்த இலங்கையரின் பேராளர் (பிரதிநிதி) இராமநாதன் என்ற பாத்தி (அத்தியாயத்துடன்) சேர். பொன். இராமநாதனின் வாழ்க்கை வரலாற்றின் முதற்தொகுதி இனிது முடிவுறுகிறது.

பல நிழற்படங்களுடன் நல்லதாளில் கவர்ச்சியும் வலிவும்மிக்க அட்டையுடன் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

சேர். பொன். இராமநாதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு துறையில் சிறந்து துலங்குகிறது எனினும் அவரின் உச்சகட்ட புகழ் 1915இனக் கலவரத்துடன் தான் தொடங்குகிறது. சிங்கள இனம் இவருக்கு என்றும் தீர்க்கமுடியாத நன்றிக்கடனுடன் வாழவேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் முறையில் தன் உயிரையே துச்சமென மதித்து இவர் ஆற்றிய பணியின் விரிவும் தன் இறுதிக்காலத்தில் செய்நன்றிகொன்றசிங்கள இனத்தால் இவர் தூற்றப்பட்ட துயர்தோய்ந்த வரலாறும், தமிழ் இனத்தை எப்படியும் அழிவில் இருந்து காக்க வேண்டும் என்று தன் இறுதிக் காலத்தில் தொனமோர் சட்டத்தை எதிர்த்து உள்ளம் உருக முழங்கிய முழக்கத்தையும் இனி வெளிவரயிருக்கும் இராமநாதனின் வாழ்க்கைவரலாற்று நூலின் தொகுதி II இனிது எடுத்து இயம்பயிருக்கிறது. தொகுதி II ன் வெளிவருகை இவரின் தொகுதி I ன் விற்பனையிலேயே தங்கியிருக்கிறது.

ஈழத் தமிழ் இனம் எதற்கும் பிறர் மீது குற்றமும் குறையும் கண்டு வாழ்வைப் போக்காது தன் கடமையைச் செய்யுமா என்ற அறைகூவலை ஏற்றவேண்டிய சூழ்நிலையில் வாழ்கிறது.

ஒரு தமிழ்ப் பெருமனைப் பற்றி பெரு முயற்சியின் விளைவால் ஒரு பெரு நூலைப் படைத்த இந் நூலாசிரியர் தான் செய்த தலையாய பணிக்குக் கைமாறாக தமிழ் இனம் தனக்கு ஏதோ அள்ளித் தரவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. தான் மேற்கொண்ட புனிதப்பணி தொடர — பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை விடுவிக்க அவர் வேண்டி நிற்பது அறிவு பெற்ற ஒவ்வொரு தமிழ் மகனும் தன் நூலை வாங்கிப் படிக்க வேண்டும் என்பதேயாகும். இந்தச் சிறிய நன்றி உணர்ச்சிகூட தமிழ் இனத்திற்கு இல்லையா என்று எவருட் கேட்க இடம் அளிக்கக் கூடாது என்பதே எம்விடுதல் அறியா விருப்பம்.

—ஈழவேந்தன்.

# தமிழுக்கு இருவர்

எங்கும் எழுச்சியடா
ஈழத்தமிழகத்தில்
தங்கத் தமிழ் இனிமேல்—தமிழா
தரணியை ஆளுமடா!

அன்றும் இதுபோல் இல்லை
அதற்குப் பிறகும் இல்லை
என்றும் இதுபோல் இல்லை—தமிழா
இன்றையில் உள்ளதடா!

ஐயமே இல்லையடா
அனைவரும் ஒன்றுபட்டார்
பொய்யோ புளுகோ இல்லை—தமிழா
புத்துணர் வோடுதடா!

என்னை மறந்தேனடா
எழுச்சி பெறத்துடிக்கும்
உன்னை நினைத்தேனடா—தமிழா
உண்மையில் வீரனடா!

இருவர் தமிழுக்கிங்கே
இருக்கிறார் கோவை—காசி
ஒருவர் கவிஞரடா —தமிழா
ஒருவர் வரைவாரடா!

இருவரும் போதுமடா
எழுத்தால் உணர்ச்சிதர
ஒருவரும் வேண்டாமடா—தமிழா
உதிரிகள் ஏதுக்கடா?

செல்வர் படையைப் போன்றோர்
சிறந்த படையுமுண்டோ?
வெல்லும் அவர் படைதான்—தமிழா
விரைவில் அறிவாயடா!

'தாமரைத்தீவான்'

# இராஜினாமா!

'வைகாசி மாதம் 22ம் திகதி இந்நாடு குடியரசாகிறது நான் வரவேற்கிறேன் ஆனால் புதிய அரசியல் அமைப்பில் தமிழ்மக்களுக்கு பூரண உரிமை வழங்கப்படவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது இந்நிலையில் சோஷலிசம் பேசிக் கொண்டு சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்கும் ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட இந்த பதவியில் உண்மையான தமிழர்கள் இருக்க முடியாது. தமிழன் தன் இனத்தைக் காக்க எதையும் இழக்கத் தயாராகிவிட்டான.

புதிய அரசியல் அமைப்பில் தமிழர்களின் பெரும்பான்மை குரலுக்கு மதிப்புக் கொடுக்காமல் ஒரு சில சுயநலவாதிகளின் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கும் இந்த அரசாங்கம் ஒரு சோஷலிச அரசாங்கமாக இருக்க முடியாது. உண்மையான சோஷலிசத்தை விரும்பும் நான் இப் பதவியில் இருக்க விரும்பவில்லை. இதனால் என் இராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

—கொக்குவில் கிராம சபையின் 16ம் வட்டாரத்தின் சார்பாக தாம் வகித்து வந்த மக்கள் குழு உறுப்பினர் பதவியையும், மேற்படி குழுவின் செயலாளர் பதவியையும் உதறியெறிந்துள்ள திரு. பொ. மதிமுகராசா மேற்கண்டவாறு மக்கள் குழுத்தலைவருக்கு அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடு காத்திடுவோம்

அன்பு நண்பா,

சென்ற ஞாயிற்றுக்கிழமை—மதியவேளை. உணவு உட்கொள்ள உட்கார்ந்திருந்தேன்; அப்போது வந்திட்ட தொலைபேசிச் செய்தியொன்று என் இதயத்தைச் சற்றுக்கலங்கிட வைத்தது—என் முன்னால் கிடந்த சாப்பாட்டு இலை மீது எனது கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் வீழ்ந்தன!

என்னைக் கலங்கிடவைத்திட்ட அச்செய்தி என்ன தெரியுமா நண்பா! எனது அருமை நண்பர் காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டார் என்கின்ற செய்திதான் அது! மன்னாரிலிருந்து நண்பர் நாகபத்மநாதன் இச்செய்தியை கலங்கிய குரலில் எனக்குத் தொலைபேசியில் கூறினார்!

**கவிஞர் அவர்களை சிறை செய்துவிட்டார்கள் என்பதற்காக அல்ல நான் கலங்கியது — விடுதலை வீரர்களுக்கு சிறைசெல்வதென்பது ஒரு சாதாரண விஷயம்—ஏற்கெனவே ஹர்த்தால் போராட்டத்தினையொட்டி கைது செய்யப்பட்ட ஐம்பதுக்குமேற்பட்ட இளைஞர்கள் சிறைச்சாலைக்குள்ளேதான் இன்று வரை இருந்துவருகிறார்கள் என்பதையும் நீ அறிவாயே!**

ஆனால் எனக்கேற்பட்ட கலக்கத்துக்கு காரணம் கவிஞர் அவர்களுடைய உடல் நிலையைப்பற்றிய சிந்தனையே! ஏற்கெனவே நோய் வாய்ப்பட்டு சாவின் எல்லையைக்கண்டு திரும்பிய கவிஞரின் நொடிந்துபோன மேனி சிறைச்சாலைத் துன்பங்களைத்தாங்கிடுமோ என்பது தான் எனது வேதனைக்குக் காரணமே தவிர கவிஞர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியல்ல!

நண்பா, விடுதலை வீரர்களுக்கு எதிராக அள்ளி வீசப்படும் அடக்குமுறைகளும், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் அவர்களது உறுதியையும், திடசித்தத்தையும் மேலும் மேலும் வளர்த்திடுமே தவிர அழித்துவிடாது என்பதை ஏனைய நாட்டு விடுதலை வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

**விடுதலைக்கு போராடுபவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளை ஏவலாம்—சிறைக்குள் தள்ளலாம் வாய்ப்பூட்டுப் போடலாம்; ஆனாலும்கூட இவற்றினாலெல்லாம் விடுதலை உணர்ச்சியை—ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்ட இலட்சிய வேட்கையை—அழித்தொழித்துவிட முடியாதென்பதை நாம் அறிவோம்!**

கூட்டங்கள் போடுவதற்குத் தடை; கருத்துக்களை வெளியிடுவதற்குத் தடை; "இம்" என்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம்—இப்படியான கெடுபிடிகளுக்கும் கொடுமைகளுக்கும் மத்தியில்தான் பல்வேறு நாடுகளில் விடுதலைப்போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன!

**நண்பா, நம்முடைய தமிழ் இளைஞர்கள்—நமது இயக்கத் தோழர்கள்—அனைவரும் பொறுமையைக் கடைப் பிடித்து, கட்டுப்பாட்டுடன் இருந்திட வேண்டிய சோதனைமிக்க நேரம் இது! விடுதலைப் போராட்டத்துக்கு மாசு கற்பித்திட—நமது இயக்கத்துக்கு களங்கம் பூசி, அதைத் திசைதிருப்பி அடக்கியொடுக்கிவிட, திட்டமிட்ட சதியொன்று இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது!**

எப்படியோ நடந்துவிட்ட சில வன்முறை நிகழ்ச்சிகளுடன் நமது இயக்கத்தையும் சம்பந்தப்படுத்தி, நமது தூய்மையான விடுதலைப்போருக்கு மாசு கற்பித்திட படாதபாடுபட்டு வருகின்றனர் நமது எதிரிகள்! எனவே இப்படிப்பட்ட நேரத்தில்தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய முப்படைகளையும் நாம் முறையாகப் பயன்படுத்திட வேண்டும்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்துவிட்டுச்சென்ற கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய முப்படைகளும் தி. மு. கழகத்துக்கு மட்டுமல்ல — உலகில் எந்த நாட்டிலும் உள்ள அரசியற் கட்சிகளுக்கு — அதைவிட விடுதலை இயக்கத்தினருக்கு — பொருந்தக்கூடியவை; பின்பற்றிட வேண்டியவை!! அதுவும் நெருக்கடிகளும் சோதனைகளும் நேரும் போது இந்த ஆயுதங்களைத் தவிர வேறு எந்த ஆயுதங்களும் நமக்கு பயன்படாது!

நம்முடைய இயக்கம், ஒரு பெரிய கடமையில் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டிருக்கிறது. ஈழத் தமிழினத்தின் இழந்துபோன சுதந்திர வாழ்வை மீட்டு, தமிழ் ஆட்சியொன்றை தமிழ் ஈழத்தில் நிறுவி நமது மக்களின் விடுதலையை நிலை நாட்டும் ஒரு பெரிய இலட்சியத்துக்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம்!

வரலாற்றுப் பெருமை கொண்ட இனம் நமது தமிழினம்! ஈழத்தில் தனக்கென சொந்த அரசமைத்து, தன்மானம் காத்து தலைநிமிர்ந்து வாழ்ந்த இனம் நமது இனம்! மற்ற இனங்களெல்லாம் மந்தைகளாய் — சொந்த ஆட்சியும் சொந்த மொழியுமின்றி சந்தி சிரித்திட வாழ்ந்திட்ட நாட்களிலேயே நமக்கென்று ஆட்சிமுறை வகுத்து, நமது உயர் தனிச் செம்மொழியாம் செந்தமிழை ஆட்சி மொழியாக்கி பெருமையுடன் வாழ்ந்த இனம் நமது இனம்!

அத்தகைய வரலாற்றுச் சிறப்புக் கொண்ட நமது இனம், மீண்டும் சீரோடும் சிறப்போடும் தனக்கென்றோர் அரசு அமைத்து, அன்னைத் தமிழை அரியணையேற்றி பேரோடு புகழோடு தன்மானத்தோடு வாழ்ந்திட வேண்டும் என்கின்ற தணியாத விடுதலை வேட்கை கொண்டு, அந்த முயற்சியிலே, கடமையிலே நம்மை நாம் ஈடுபடுத்திக்கொண்டு இருக்கிறோம்—கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக!

இந்தப் புனிதமான போராட்டத்திலே கடமையிலே ஈடுபட்டு தங்களையே அழித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற தியாகிகள் நமது கூடாரத்திலேயிருக்கிறார்கள். அமரர்கள்

## அரசியல் மேடை

வன்னியசிங்கம், இராசவரோதயம், ஏகாம்பரம், கந்தையா, திருமலை நடராசன், ஐயாவு பிரான்சிஸ், கொடிகாமம் ஐயா, டாக்டர் நாகநாதன் போன்றவர்கள் எல்லாம் இந்தப் பெரும் இலட்சியத்துக்காக தங்களையே அர்ப்பணித்த தியாக மாமலைகள் என்பதை நாடறியும், நல்லோர் அறிந்திடுவர்!

**நம்முடைய நோக்கங்களை மிகவும் கண்ணியமான முறையிலே எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்; நம்முடைய இயக்கங்களை மிகவும் கண்ணியமான முறையிலே நடத்தி வந்திருக்கிறோம் — நம்முடைய விடுதலைப் போராட்டங்களை அறவழியிலே அஹிம்சையின் அடிப்படையிலேதான் நடத்தி வந்திருக்கிறோம் — தொடர்ந்தும் நமது போராட்டங்கள் அனைத்தும் அமைதி வழியிலே அஹிம்சை முறையிலேதான் நடைபெறும் என்றும் நமது தலைவர்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டிருக்கிறார்கள்!**

கண்ணியமான முறையில் நமது இயக்கங்களும் நமது பிரசாரங்களும் அமைந்திட்ட காரணத்தால், இதுகாலவரை நமது இலட்சியத்தை — நாம் கூறிவந்த கருத்துக்களை — மறுத்துரைத்து வந்தோரும் இன்று நமது கூற்றிலுள்ள உண்மைகளைப்பற்றிச் சிந்தித்திட தலைப்பட்டிருக்கிறார்கள்! இதன் பயனாக தமிழினமே இன்று ஓரணியில் கூட்டணியாக திரண்டு நிற்கிறது!

**இந்த நேரத்தில்தான் நண்பா, கட்டுப்பாடு என்பது மிகவும் அவசியமாகிறது! தமிழினம் ஓரணியில் "தமிழர் கூட்டணியாக" திரண்டு நிற்பதைக் கண்ட அரசும் அரசின் அடியாட்களும் இன்று அலமந்து போய் மருட்சியடைந்து நிற்கிறார்கள்! இதனால், மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு — துடிப்பும் விடுதலை உணர்வும் மிகுந்த நம் இயக்கக் காளைகளை சிறைக்குள் தள்ளவும், அடக்குமுறைகளைப் பிரயோகித்து அவர்களது உணர்வுகளை நசுக்கிடவும் திட்டம் தீட்டப்படுகிறது!**

எனவேதான் இந்தச்சந்தர்ப்பத்தில் நம்முடைய தமிழர் கூட்டணித் தலைவர்களின் கட்டளைப்படி, நமது இளைஞர்கள், கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்! வீணாக கட்டுப்பாடு குலைந்து அரசின் அடக்குமுறைப் பிடிக்குள் சிக்காது — கட்டுப்பாட்டுடன், கடமை' கண்ணியம் காத்திடும் முறையில் — நம் இளைஞர்களும் மாணவ மணிகளும் நடந்துகொள்ளவேண்டும்!

**எந்த ஒரு விடுதலை இயக்கமும் கட்டுப்பாட்டுடன் நடத்தப்படாவிட்டால் — அந்த இயக்கம் ஒரு நாளும் வெற்றிகண்டிட முடியாது! அதுவும் சோதனைகளும் நெருக்கடிகளும் ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம் கட்டுப்பாடு ஒன்றே நமது கேடயமாக இருந்திட வேண்டும்!**

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழினம் முழுவதும் இன்று ஓரணியாக, தமிழர் கூட்டணியிலே தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு நிற்கிறது! தமிழினத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு, விடுதலை போராட்ட வெற்றிக்கு, இது ஒரு நல்ல சகுனமாக காட்சி தருகிறது! தமிழினத்தின் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுவிட்டதென்ற மகிழ்ச்சியில் தமிழர்கள் இன்று புதிய மிடுக்குடன், புதிய நம்பிக்கைகளுடன், புதிய தெம்புடன் காட்சிதருகிறார்கள்! தமிழன் ஒவ்வொருவனது உள்ளமும் இன்று பெருமையில் மிதந்து கிடக்கிறது. வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வோம்—வீழ்ந்தால் ஒன்றாக வீழ்வோம் என்று சபதமெடுத்து விட்டனர் தமிழினத்தின் தானைத் தலைவர்கள்!

**இந்நிலையில் பழையவற்றைக் கிளறிவிட்டும்,—பகைமையை மூட்டியும்—ஆளுக்காள் சிண்டு முடிந்தும் தமிழர் கூட்டணியில் இணைந்துள்ள தலைவர்களையும் கட்சிகளையும் பிரித்துவிட இந்நாட்டு ஏடுகள் அனைத்தும் திட்டமிட்டு சூழ்ச்சி புரிந்துவருகின்றன. இந் நோக்கத்துடன் பொய்ச் செய்திகளும், புனைகதைகளும் நாள் தோறும் வெளியிட்டு வருகின்றன.**

இதில் ஆச்சரியமென்னவென்றால் தமிழர் கட்சிகள் பிரிந்து நின்றபோது ஒன்றுபட வேண்டும் என்று குரலெழுப்பிய 'டைம்ஸ் ஆப் • சிலோன்', 'டெயிலிமிரர்' போன்ற ஏடுகள் கூட, ஒற்றுமை ஏற்பட்டுவிட்ட இந்த நேரத்தில் அந்த ஒற்றுமையை உடைத்திடக்கூடிய முறையில் செய்திகளும் கட்டுரைகளும் வெளியிட்டு வருவதுதான்!

**யார் என்ன சொன்னாலும் — யார் தலைகீழாக நின்றாலும் ஏற்பட்டுவிட்ட தமிழின ஒற்றுமையை உடைத்தெறிய எந்தச் சக்தியாலும் இனிமுடியாது; தமிழர் கூட்டணி இனிப் பிரிக்க முடியாத ஒரேயணியாக என்றென்றும் விளங்கும் — விளங்க வேண்டும்! இதுவே தமிழர்களின் ஆசையாகும்!**

ஆக, தமிழினமும், தமிழர் கூட்டணியிலுள்ள கட்சிகளும், தலைவர்களும், தமிழினத்து இளைஞர்களும் கட்டுப்பாட்டுடன் செயலாற்றுவார்களானால், நம்மை அழிக்கும் சக்தி உலகில் யாருக்குமே இல்லையென்பேன்!

கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு நாம் ஏற்றுக்கொண்ட கடமையை நிறைவேற்றிட தொடர்ந்து உழைப்போம்! கன்னித் தமிழை வாழவைப்போம்!!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஒற்றுமையை உடைக்க திட்டமிட்ட சதி!

**"எங்கள் பகைவர்கள்**
**எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர்கள்**
**ஒன்றுதல் கண்டே"**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உணர்ச்சித் துடிப்புமிக்க மேற்கண்ட கவிதை வரிகளை இசைத்தபடி ஈழத் தமிழினம் இன்று ஒரேயணியாக ஒன்று திரண்டு புதிய அரசியல் சாசனத்தை எதிர்த்திடவும், இன விடுதலைக்குப் போராடிடவும் தயாராகிநிற்கிறது.

தமிழர் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையும் உறவும், தமிழர் தலைவர்கள் அனைவரும் ஈழத் தமிழ் நாட்டின் தந்தை பெரியவர் செல்வா அவர்கள் தலைமையில் ஒரேயணியாக ஒன்று திரண்டு தமிழினத்தின் விடுதலைக்கு போராட உறுதியெடுத்திருப்பதும், தமிழ் மக்களிடையே புதிய நம்பிக்கையையும் வேகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆம், தமிழர் கூட்டணியின் தோற்றம்—தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதில் தடையில்லை!

தமிழர் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படாதா என்று ஏங்கிக்கிடந்த தமிழுள்ளங்கள் அனைத்தும் இன்று மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியுள்ளன.

இதற்கு முன்னர் தமிழர் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த எத்தனையோ தடவைகளில் எத்தனையோ முயற்சிகள் எத்தனையோ பேரால் மேற்கொள்ளப்பட்டனவாயினும் அவையெல்லாம் பொதுத் தேர்தலில் ஒரு சிலருக்கு தொகுதி ஒதுக்குவதொன்றையே அடிப்படையாகக் கொண்டவையாக அமைந்த காரணத்தால் அந்த முயற்சிகள் அனைத்தும் கைகூட முடியாமல் குலைந்து விட்டன.

ஆனால் இன்று தமிழர் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை—உருவாக்கப்பட்டுள்ள தமிழர் கூட்டணி—கொஞ்சம் கூட சுயநலக் கலப்பின்றி, தமிழ் இனத்தின் மொழி, இன உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் போராடுவதொன்றையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு அமைந்து விட்டது.

**ஓர் இலட்சியத்தின் அடிப்படையிலேயே ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றும், அப்போதுதான் அது நீடித்து நிலைத்துநின்று இனத்துக்குப் பலன் செய்ய முடியுமென்றும் நாம் நீண்டகாலமாக இப்பத்திகளில் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். நாம் சுட்டிக்காட்டி வந்த அதே அடிப்படையில் தமிழர் கூட்டணி இன்று உருவாகியுள்ளதைக்கண்டு தமிழ் மக்களுடன் சேர்ந்து நாமும் மகிழ்ச்சியடைகிறோம்!**

தமிழினத்தின் ஒற்றுமைக் கண்டு உலகமே பிரமித்து நிற்கும் வேளையில்—இந்த ஒற்றுமையை உடைத்தெறிந்து தமிழ் மக்களை மீண்டும் நெல்லிக்காய் மூடைபோல சிதறடித்திட செய்திடும் சூழ்ச்சியில் அரசின் எடுபிடிகளும் ஆட்சியாளரின் அடிநக்கி வாழும் இந்நாட்டு நாளேடுகளும் தீவிரமாக இறங்கியிருக்கின்றன.

தமிழர் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளிடையேயும், தலைவர்களிடையேயும் பிளவுகளையும், பேதங்களையும் மனக்கசப்பையும் தூண்டிவிட்டும் தமிழர் கூட்டணியை உடைத்திடச் செய்யும் சதிநோக்குடன் பழைய பிரச்சினைகளை கிளறிவிட்டும்—ஆளுக்காள், கட்சிக்கு கட்சி சிண்டு முடியும் செய்திகளையும், கட்டுரைகளையும் நாள்தோறும் வெளியிட்டு வருகின்றன இந்நாட்டு ஏடுகள் சில.

**ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்கு போராடும் மிக உன்னதமான அடிப்படை இலட்சியத்தினால் பிணைக்கப்பட்டு தந்தை செல்வா தலைமையில் ஒன்று திரண்டுள்ள தமிழர் கூட்டணியை பிளவுபடுத்தும் சக்தி நாளேடுகளுக்கோ அல்லது வேறு யாருக்குமோ கிடையாது என்று நாம் கருதுகிறோம்.**

தந்தை செல்வா தலைமையில் அமைந்துள்ள தமிழர் கூட்டணியை பிளவுபடுத்த நினைப்பவர்யாராக இருந்தாலும், அவர் தமிழ் மக்களால் வெறுத்தொதுக்கப்படுவது நிச்சயத்திலும் நிச்சயம் என்பதுடன், தமிழர் கூட்டணியை உடைக்கும் எந்த முயற்சியையும் தமிழ் மக்கள் கிஞ்சிற்றும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதையும் இங்கு அழுத்தம் திருத்தமாக கூறிவைக்க விரும்புகிறோம்.

வாழ்ந்தால் ஒன்றாகவாழ்வோம்—வீழ்ந்தால் ஒன்றாக வீழ்வோம்—இதுவே தமிழர் கூட்டணியினரின் சங்கநாதமாக என்றும் முழங்கட்டும்!!

# மன்னூரில் தமிழர் பேரணி திரண்டது!

## முற்றவெளிக் கூட்டத்தில் தலைவர்கள்உரிமைமுழக்கம்

மன்னூர் மாவட்டத்திலே தமிழர் கூட்டணியின் பிரச்சாரக் கூட்டங்கள் அடம்பன், முருங்கன், நானாட்டான் பகுதிகளில் நடைபெற்றன. 10ந் திகதி மன்னூர் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கடைசிக் கூட்டத்தில் மாவட்டத்தின் மேற்கே தலைமன்னரிலிருந்து முருங்கன் வரையும், வடக்கே வெள்ளாங் குளத்திலிருந்து தெற்கே மறிச்சுக்கட்டி வரையுமுள்ள இம் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தமை மாவட்டத்தின் வரலாற்றிலேயே முன்னொருபோதும் கண்டிராத காட்சி. இவ்வளவு பெரிய கூட்டத்தை இங்கு நான் எப்போதும் கண்டதில்லை என ஒரு முஸ்லிம் வயோதிபர் என்னிடம் கூறினர்.

தமிழர் கூட்டணித் தலைவரான தமிழர் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சிப் பா. உ. திரு. ஆனந்தசங்கரி, இ. தொ. கா. மன்னூர் மாவட்டப் பிரதிநிதி திரு. வேலுச்சாமி உட்பட தமிழரசுப் பா. உக்கள் பலரும் உள்ளூர் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

### செல்வா பேச்சு

திரு. செல்வநாயகம் தமது உரையில் புதிய அரசியல் திட்டத்துக்கு தமது கட்சி கொண்டு சென்ற தமிழரின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அடங்கிய திர்மானத்தைக்கூட அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொள்ளாததால் தாங்கள் விலகியதாகக் குறிப்பிட்டார். தரப்படுத்துதல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், பல்கலைக் கழகத்துக்கு எத்தனையோ திறமையுள்ள தமிழ் பேசும் மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பிரவேசிக்காமல் தடுக்கப்பட்டதாகவும் கூறினர்.

''திரு. மாட்டின் அவர்கள் பதிவேடுகளைத் தமிழில் வைத்திருப்பதற்கு சட்டம் கொண்டுவர அரசாங்கம் இணங்கியிருப்பதாக கூறியதாக இன்றைய பத்திரிகைகளில் கூறப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்கதுதான். என்றாலும் இத்திருத்தம் அரசியல் சட்டத்துடன் சேர்க்கப்பட மாட்டாது. தனித்த சட்டமாக இருக்கும். தேவைப்படும்போது இத்திருத்தச் சட்டத்தை நீக்கிவிடலாம். இதனால் நீதிமன்ற மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாது'' என்றார்.

கடந்த 22ந் திகதி தமிழர் கூட்டணியின் வேண்டுகோளை ஏற்று தமிழ்ப் பகுதிகளில் துக்கம் தெரிவித்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அவர், எதிர்காலத்திலும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் தம் முழு ஒத்துழைப்பையும் தருவார்கள் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக கூறினர்.

தமிழுக்காக, தமிழின் வாழ்வுக்காக சிறையில் அடைபடவும், சித்திரவதைப்படவும் தாம் தயாராக இருப்பதாக அவர் கூறியபோது கூடியிருந்த மக்கள் கடல் உணர்ச்சி மீறிப் பொங்கியது.

### தர்மலிங்கம்

திரு. தர்மலிங்கம் தமது உரையில் சோவியத் நாட்டின் குடியரசுக்கும், இலங்கை குடியரசுக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு விளக்கியதுடன் இலங்கைக் குடியரசில் பௌத்த மதம் ஏனைய மதங்களிலும் பார்க்க கூடிய அந்தஸ்தை பெற்றிருப்பதற்கு வருத்தம் தெரிவித்தார். மதம் மக்களுக்கு அபின் என்ற கொள்கையில் வந்த மார்க்ஸீய வாதிகள் இலங்கையில் மதத்தைக் காட்டி மக்களை ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை பற்றிவியப்புத் தெரிவித்தார்.

யாழ் பெற்றோர் சங்கக் காரியதரிசி திரு. பொன்னையா, தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை தெளிவாக எடுத்துக் காட்டினர். ஒவ்வொரு தமிழ் பேசும் பெற்றோரும் தம் குழந்தையின் கல்வியைப் பற்றி கவனம் செலுத்த வேண்டும். யாழ் மாவட்டத்திலே சிங்களம் படிப்பதற்கு மாணவர்கள் விரும்பவில்லை. ஆனால் கல்விப்பகுதி திணிக்க முயலுகிறது. இதை நாம் எதிர்த்தே தீரவேண்டும். எமது அன்னைத் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து கிடைக்கும் வரையும் எந்தத் தமிழ்ப் பெற்றோரும் தம் குழந்தைக்கு சிங்களத்தைப் படிப்பிக்க கூடாது என அவர் குறிப்பிட்டார்.

### செல்லத்தம்பு முழக்கம்

திரு. செ. மா. செல்லத்தம்பு உரையாற்றிய போது 1947ம் ஆண்டு தொடக்கம் 1972ம் ஆண்டுவரையும் தமிழினக் கட்சிகளை ஒற்றுமைப் படுத்த எடுத்த முயற்சிகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறி அவைகள் முற்றாகத் தோல்வியடைந்தன என்றார். ஆனால் தமிழ் மொழியின் வருங்காலத்துக்காக எம் மொழியின் உயர்ச்சிக்காக, இன்று தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் இ. தொ. காங்கிரஸ் அடங்காத் தமிழர் முன்னணிக் கட்சிகள் ஒன்றுபட்டிருப்பதாயும் இந்த ஒற்றுமையை நாம் வளர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வட கீழ் மாகாணங்களிலுள்ள தமிழ் இஸ்லாமிய மக்கள் ஒன்று சேர்ந்து புதிய அரசியல் திட்டத்தை எதிர்க்க வேண்டும். காலங்காலமாக மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டு, ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களையும் தமிழர்களையும் இன்று சில இஸ்லாமிய தலைவர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக பிரித்து இரு சிறுபான்மை இனங்களையும் மோதவிட முயலுகிறார்கள். இதை ஒருபோதும் வட கீழ் மாகாண இஸ்லாமிய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக அவர் கூறினர்.

கடந்த இருபது ஆண்டுகளாக அரசாங்கம் முஸ்லீம்களுக்கு இழைத்துவரும் துரோகத்தை அவர் அம்பலப்படுத்தினர். கடந்த காலத்தில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியதாகக் கூறிய இஸ்லாமிய மந்திரிமாரில் திரு. ரி. பி. ஜெயா கொழும்பைச் சேர்ந்தவர், திரு. எம். சி. எம் கலீல் கொழும்பைச் சேர்ந்தவர், திரு லீ. ஏ. எஸ். மரிக்கார் கடுகண்ணுவையைச் சேர்ந்தவர். இப்போதைய கல்வி மந்திரி மாத்தறையைச் சேர்ந்தவர். ஒரு மந்திரிப் பதவியைப் பெற வட கீழ் மாகாணங்களில் தகுதியான முஸ்லிம் மகன் ஒருவர் இந்த அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லையா? இஸ்லாமிய மக்கள் ஏன் இதை சிந்திக்கவில்லை? புனித ஹஜ் யாத்திரையை செய்ய அந்நிய செலாவணியைக் காட்டி தடை செய்யும் அரசு, மந்திரிமார்மட்டும் செல்வதற்கு மூன்று இலட்சம் நாலு இலட்சம் செலவழிப்பதை முஸ்லிம் மக்கள் அறியவில்லையா?

அநுராதபுரத்தில் இன்று வர்த்தகத்தில் ஈடுபட்ட முஸ்லீம்கள் 756. காலப்போக்கில் முஸ்லீம்களின் வர்த்தகத்தை அழிக்க அரசு சதி செய்கிறது. மேற்கே ரோமாபுரிக்கும் கிழக்கே கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் சென்று வர்த்தகத்தால் தம் பெயரை உலகில் நிலைநாட்டிய முஸ்லிம் மக்கள் எங்கே? எனவே முஸ்லிம் மக்கள் தம் நிலையை நன்றாக உணர்ந்து தமிழ் மக்களுடன் ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த நூற்றாண்டில் 1856க்கு முன், தமிழர் பிரதேசங்களாக இருந்த பகுதிகள் இன்று சிங்களக் குடியேற்றத்தால் முழுச் சிங்கள கிராமங்களாக மாறிவிட்டன. கடந்த நூற்றாண்டிலும் 1910லும் வட மாகாணத்தின் அரசாங்க அதிபரின் கீழ் இருந்தது அநுராதபுரம். 1856ல் ஏற்பட்ட சூறாவளியால் வவுனியாப் பகுதியில் உள்ள கிராமக் குளங்கள் தூர்ந்துவிட அவற்றைத் திருத்துவதற்காக, நுவரகலாவிய பகுதியிலிருந்து சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்; அன்று முழுத் தமிழ்க் கிராமங்களான இவைமாடு என்பது மாமடுவ எனவும் ஈறற் பெரிய குளம் என்பது ஈறற் பெரிய குளம் என்றும் கூறப்படுவதுடன், இவர்களுக் இன்று வவுனியா தெற்கு காரியாதிகள் பிரிவும் உண்டு. திட்டமிட்ட குடியேற்றத்தால் இப்படியாக பல தனித் தமிழ்க் கிராமங்கள் முழுச் சிங்களக் கிராமங்களாக மாறிவிட்டன. எனவே வடகீழ் மாகாணங்கட்கு வெளியில் வசிக்கின்ற 4 இலட்சம் தமி

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தளபதி அமிர் அவர்களே! மட்டுநகருக்கு வாருங்கள்!!" இளைஞர்கள் கேட்டார்கள் இப்படி!

''ஈழத் தமிழ் இளைஞர்களின் ஈடிணையற்ற தலைவரே! எங்கள் கட்டித் தங்கம் அமிர்தலிங்கம் அவர்களே! மட்டுநகருக்கு நீங்கள் வாருங்கள். மட்டுநகரிலேயே வந்து குடியேறுங்கள்! உங்களை இருகை நீட்டி வரவேற்க மட்டுநகர் தமிழ் மக்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். நீங்கள் மட்டக்களப்பு மக்களுக்கு எத்தனையோ உதவிகளை தன்னலம் கருதாது செய்திருக்கிறீர்கள். எத்தனையோ வழக்குகளை வென்று கொடுத்திருக்கிறீர்கள்! உங்கள் குடும்பத்துடன் மட்டுநகரில் வந்து குடியேறி எமக்குப் பக்கபலமாக இருங்கள்.''

—இவ்வாறு தளபதி, நாவலர் அமிர்தலிங்கம் அவர்களை ஒரே குரலில் கேட்டார்கள் மட்டக்களபபு இளைஞர்கள். 4-6-72 காலை மட்டுநகர் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி அமைப்புக் கூட்டத்திலேயே இவ்வாறு அவர்கள் கேட்டார்கள்.

அற்புதராசா குருஸ், மாணவர் செயராசா ஆகியோருட்பட ஏராளமான இளைஞர்கள் இப்படி ஒரே குரலில் கேட்ட போதும், அங்கிருந்த வேறு சிலர், ''தளபதி அமிர்தலிங்கத்தின் சேவை மட்டுநகருக்குமட்டுமல்ல—நாடு முழுவதற்குமே தேவை. தமிழ் தேசிய இனம் முழுவதற்குமே சொந்தமானவர் அவர். ஆகையால் அவரை மட்டக்களப்புக்குள் மட்டும் முடக்குவது ஆகாது. ஆனால் இதற்கு முன் எப்படி மட்டுநகர் மக்களுக்காக உழைத்தாரோ அப்படியே தொடர்ந்தும் உழைப்பார்'' என்று எடுத்துரைத்தனர்.

தளபதி அமிர்தலிங்கத்தின் மீது மட்டுநகர் மக்களும் இளைஞர்களும் கொண்டுள்ள பாசப்பிணைப்பை இது எடுத்துக் காட்டிவிட்டதென்று பலரும் பேசிக் கொண்டனர். மட்டுநகர் இளைஞர்களின் இந்த அன்பு வெள்ளத்தில் மூழ்கியபடியே தளபதி அவர்கள் புன்னகை பூத்தபடி மேடையில் அமர்ந்து இருந்தார்.

# விடுதலை உணர்வை வளர்ப்போம்! வெற்றியடைவோம்!

மே 22, ஈழத்தைப் பொறுத்தவரை நல்ல திருப்புமுனை என்று சொல்வதைவிட, தமிழினத்தின் போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயம் என்று சொல்வதே பொருத்தமாகவிருக்கும்.

பத்தாண்டுகளுக்குப் பின்-1961 சத்தியாக்கிரகத்துக்குப்பின் — இப்போதுதான் மீண்டும்தமிழினம் போராட்டப் பாதையில் இறங்கியிருக்கிறது.

மே 22 நிகழ்ச்சிகள், கடந்த பத்து ஆண்டுகளில் தமிழினத்தின் சிங்கள ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி கொஞ்சமும் குறைந்துவிடவில்லை என்பது மட்டுமல்ல, அது வளர்ந்து உக்கிரம் அடைந்திருப்பதை தெட்டத் தெளிவாகக் காட்டிவிட்டது.

முன் எப்பொழுதும் இல்லாதமாதிரி இம்முறை போர்ராட்டக் களத்தில் புதியதொரு சக்தி தீவிர பங்கு எடுத்து வெற்றிவாகை சூடியிருக்கிறது. அந்தப் புதிய சக்தி மாணவ சக்திதான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த வகையில் தமிழ் மாணவர்கள் வேறெந்த நாட்டு மாணவர்களுக்கும் சளைத்தவர்கள் அல்லவென்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

கடந்த பத்தாண்டுப்போர் ஓய்வுக்குப்பின் — குறிப்பாக கடந்த இரண்டாண்டுகளாக ஆட்சியாளர்களால் வடக்குக் கிழக்கில் ஒரு ஐந்தாம்படை மெத்தச் சிரமப்பட்டு நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஐந்தாம் படைக்கு சிங்கள ஏகாதிபத்தியம்—

பட்டங்கள்,
பதவிகள், அஞ்சல் உப-நிலையங்கள்,
மாற்றல்கள்,

இன்னபிற சலுகைகள் தாராளமாகவும் ஏராளமாகவும் கொடுத்துவந்திருக்கிறது. சமாதான நீதவான் பட்டங்கள் அரசியல் அயோக்கியத்தனத்திற்கு

**இளங்கோ**

பெயர்போன ஒரு வட அரசியல்வாதியால் கோவிலில் 'சுண்டல்—கடலை' கொடுப்பதுபோல் அவரது சட்டைப் பைக்குள் இருந்து கொடுக்கப்பட்டுவந்தது.

இவற்றிற்கு பிரதியுபகாரமாக இந்த ஐந்தாம் படை வடக்குக்கு படையெடுத்து வந்த ஐக்கிய முன்னணிமுழு மந்திரி அரை மந்திரிகளுக்கு ஏன் சாதாரண ஒரு சிங்கள அரசாங்க அதிகாரிக்கும் ஆலவட்டம், குடை, கொடி மாலை பந்நீர், சந்தனம். ஏன் 'மது' 'மங்கை' உட்பட எல்லாமே கொடுத்து அவர்கள் அடிகழுவி அதைப் பருகி மகிழ்ந்து கிடந்தது.

மூலைக்குமூலை ஸ்ரீலங்காக் கிளைகள். காலை பெய்த அரசியல் மழைக்கு மாலை முளைத்த ஸ்ரீலங்கா குஞ்சுகள் கூட பத்திரிகைகளில் நீண்ட அறிக்கை வெளியிட்டன. அவற்றை யெல்லாம் கொட்டை எழுத்துக்களில் ஏரிக்கரை, தினபதி, வீரகேசரி, ஏன் ஈழநாடு உட்பட அத்தனை பத்திரிகைகளும் வெளியிட்டு பெரிய பிரசார யுத்தமே செய்தன.

தேசிய ஒருமைப்பாடு பற்றி மந்திரி குமாரசூரியார் குக்கல் கக்குவதுபோல் தனது 'சொந்தப்' பத்திரிகையான தினகரனில் நாளாந்தம், அதிகமாக ஞாயிறு தோறும் கக்கி வந்தார்.

முற்போக்கு எழுத்தாளர்கள் விட்டார்களா? கீரைபோ—கீரை' என்று விற்பதுபோல 'தேசியமோ-தேசியம்' என்று 'தமிழ்' விழாக்கள் மூலம் கூவி விற்றார்கள்!

போதாக்குறைக்கு கல்வி அமைச்சர் பதியூதீன் மாரர் தட்டினார் 'சென்றேன், கண்டேன், வென்றேன்' என்று!

ஆனால் மே 22ல் இவை யெல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டன! துகள் துகளாக உடைத்தெறியப் பட்டன!! [illegible] கொண்ட எலிக்குஞ்சுகள் இன்றும் தலைகாட்டினால், தலைபோய் விடும் என்ற பயத்தில் அங்கேயே முடங்கிக்கிடக்கின்றன!

இனி அடுத்து என்ன? என்ற கேள்வி. விடுதலைப் போராட்ட வரலாற்றில் 'அடுத்து' என்ன என்ற கேள்விக்கே இடமில்லை!

நாம் நடாத்தும் போராட்டம் ஓரு சத்தியப்போராட்டம். இழந்து விட்ட உரிமைகளை மீண்டும் பெற நடைபெறும் சுதந்திரப்போராட்டம். இந்தப் போராட்டம் சிங்கள ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக ஒவ்வொரு வினாடியும் நடக்கின்ற—நடாத்தப்படுகின்ற பிரகடனப்படுத்தப்படாத (UNDECLARED WAR) போர்! தமிழர்களது-

இல்லங்கள்
பள்ளிகள்
அலுவலகங்கள், வியாபார நிலையங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## வாசகர் [illegible]

அன்புள்ள கோவை அண்ணா,

14.5.72-ந் திகதி சுதந்திரனில் தாங்கள் எழுதிய 'அரசியல் மடலை' வாசித்த போது, எனது உள்ளத்தில் ஊற்றெடுத்த மகிழ்ச்சிப் பிரவாகம் என்னையறியாது கண்வழியே ஆனந்தக் கண்ணீராக வழிந்தது. மேலும் வர்ணிக்க வார்த்தையில்லாது ஏங்குகிறேன். இன்றைய ஈழத் தமிழ் மக்களின் நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்திருப்பதைப் பார்க்கும்போது தமிழ் மக்களின் விடிவுகாலம்மிக அண்மையில்தான் இருக்கிறது என்பதை உணரமுடிகிறது. உங்கள் எழுத்துப்பணி பல்லாண்டு காலம் தொடர்ந்து எம்போன்ற இளைஞர்களை ஊக்குவிக்க வாழ்த்துகிறேன்!

இ. ஜெயச்சந்திரன்,
வலையிறவு, மட்டுநகர்.
13.5.72.

★

அன்பின் கோவை அண்ணா!

தாங்கள் 14-5-72 சுதந்திரன் இதழில் எழுதிய அரசியல் மடல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். அதில், நீங்கள் எழுதிய மடலில் எந்த ஒரு தமிழனாவது அரசியல் திட்டத்திற்கு வாக்களித்தானாகில் அவன் ஒரு தமிழனுக்கும் தமிழச்சிக்கும் ஜனித்தவன் அல்ல என்று எழுதியுள்ளீர்கள். உண்மையான தமிழனையும் மற்றைய தமிழ்த்துரோகிகளையும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் அறியத்தான் போகின்றார்கள். இதை எழுதியதற்காக மானமுள்ள தமிழ் மக்கள் உணர்ச்சி பொங்க தங்களை வாழ்த்துவார்கள்.

சி. முருகானந்தவேல்
கொழும்பு-11
14-5-72

அன்புள்ள கோவை அண்ணாவுக்கு:-

தூங்கிக் கிடந்த தமிழ் இளைஞர்களுக்கு தனது திராவிட நாடு இதழில் தம்பிக்கு எழுதிய அரசியல் மடல் மூலம் தன்மான, மொழி உணர்வை உண்டாக்கினார் பேரறிஞர் அண்ணா. அதே பணியை இன்று ஈழத்தமிழ் நாட்டில் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரலாம் சுதந்திரன்மூலம் அண்ணாவின் வாரிசான நீங்கள் செய்துவருகிறீர்கள். தங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

சீதையை ராமனிடம் ஒப்புவித்து அவன் காலிலே வீழச் சொன்ன தம்பி விபீஷணனைக் காறிஉமிழ்ந்து மானத்துக்காக களத்திலே உயிர் விட்ட மறத் தமிழன் இராவணன் பரம்பரையில் வந்தவர்கள் நாம். கொள்கையை விட்டு கோழைகளாக வாழமாட்டோம் என்பதை அரசியல் மடல்மூலம் படித்து தன்மான உணர்வால் ஈழத் தமிழகம் அலைகடலென நிரம்பி நிற்கிறது.

எனது ஆசை ஒன்றை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன். சுதந்திரன் முதற் பக்கத்தில் மாலைமணி, திராவிடத்தான் பத்திரிகைகள்போல், தமிழுக்காக உயிர் நீத்தவர்களுடையதும் தமிழுக்காக போராடி வருகின்றவர்களதும் புகைப் படங்களை வெளியிடவும். சகோதரி கலைச்செல்வி கேட்டதுபோல், தமிழ்நாட்டின் இதழ்களில் வரும் அரசியல் செய்திகளை மறு பிரசுரம் செய்யுமாறும். தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,
அ. பாலச்சந்திரன்,
கௌரவ செயலாளர்,
அல்லைப்பிட்டி, கிழக்கு
ஐ. நா. சங்கம். 9-5-72

★

போற்றுதற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

தங்களின் 'சுதந்திரன்' கண்டேன்; களிமிகுகொண்டேன். உன்னதமான தங்களின் லட்சியப்பணியும்-துணிவும் தலைதாழ்ந்து நிற்கும் தமிழ் சமுதாயத்திற்கு கிடைத்திட்ட அரும் புதையல்-பெரும் பேறாகும்.

'அரசியல்மடலினை' நினைத்தாலே நெஞ்சத்தில் தேன் கசிகிறது. அதில் காணப்பெறும் ஆழமான உண்மைகளும் தெளிவும் இன எழுச்சிக்காக ஏங்கி நிற்கும் அனைவருக்கும் விழிப்புணர்ச்சியை நல்கும் என்பது எனது திண்ணமான எண்ணம். அண்ணாவின் 'தமிழ்நாடு கண்டேன்' 'இலக்கிய உலகு' பகுதிகள் இன்புறச் செய்கின்றன.

தங்களின் செந்தமிழ்ப் பணியை சந்துமுனையும் சிந்து பாடும் நல்ல நேரம் காத்திருக்கிறது.

இவண்,
சு. சாத்தையன்,
கொழும்பு-10.
12-5-72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் மிருக வெறிக்கு பெண்களின் கற்பு பலியாவதா?

## பிரதமரிடம் செல்வா ஆட்சேபம்!

வடபகுதியில் இராணுவத்தினரின் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வெறிச் செயல்களால் பெண்களின் கற்பு ஊசலாடுவதாக தமிழரசுத்தந்தை செல்வா அவர்கள் பிரதமரிடம் முறையிட்டுள்ளார். இந்த கொடுங்கோன்மையை தடுத்து நிறுத்த பிரதமர் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் செல்வா வற்புறுத்தியுள்ளார்.



இதுசம்பந்தமாக தந்தை செல்வா பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:-

''காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பட்டினசபைக்குப் பக்கத்தில் வசிக்கும் நகர சுத்தித் தொழிலாளியின் விட்டுக்குள் புகுந்து அவரது மனைவியை கடற்கரைக்கு இழுத்து சென்று கற்பழிக்க முயன்றனர். அப்போது அப்பெண் ஓலமிடவே அயலவர்கள் ஓடிவந்தனர். இதனைக் கண்டு இராணுவத்தினர் அங்கிருந்து மறைந்துவிட்டார்கள். இச்சம்பவம் இம்மாதம் 2ம் திகதி நடைபெற்றது.

''இதுபற்றி பொலிசாரிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,

''காங்கேசன் துறையில் உள்ள பாண் போறணைத் தொழிலாளி ஒருவரின் வீட்டுக்குள் அவர் இல்லாத நேரம்பார்த்து இராணுவத்தினர் புகுந்திருக்கிறார்கள்.

''அத்தொழிலாளியின் மனைவி குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கவே இராணுவத்தினர் குழந்தையை அப்பால் தூக்கிப் போட்டுவிட்டு தாயின் கையைக்கட்டி அவரைக் கற்பழித்திருக்கின்றனர். இந்தப் பெண் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

''இனியும் இத்தகைய சம்பவங்கள் நடைபெற இடமளிக்காவண்ணம் இராணுவ அதிகாரிகளுக்கு கட்டளையிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.''

## "புதிய அரசியல் சட்டத்தை தமிழினம் முழுவதும் எதிர்க்கிறது!"

''புதிய அரசியல் சட்டம் சந்தேகமில்லாமல் மூன்று வகையானவருக்கே ஏற்புடையதாக இருக்கிறது. பௌத்தம் அரசாங்க மதமாக்கப்பட்டு விட்டதென்று மகிழ்ச்சிக்கடலில் மிதக்கும் பௌத்தர்களுக்கும், பருத்தித்துறை தொடக்கம் தேவந்துறை வரை சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக்கப்பட்டுவிட்டதென்று மகிழும் சிங்கள மக்களுக்கும் இடதுசாரிகளுக்குமே அது இசைந்ததாக இருக்கிறது.

''பௌத்தர்களும் சிங்களத் தீவிரவாதிகளும், தனியார் சொத்துகளுக்கு எதிரான தகுந்த பாதுகாப்புடன் கூடிய சோசலிசக் கொள்கைக்கு சரணகதியடைவது சிங்கள பௌத்த குடியரசை ஸ்தாபிப்பதற்கு தாம் கொடுக்க வேண்டிய சிறிய விலை என்று கருதுகிறார்கள்.

''இன, மத, மொழி ரீதியிலான சிறுபான்மை மக்களை மிகவும் குறைந்த காலத்தில் சிங்களவர்களாகவும் பௌத்தர்களாகவும் மாற்றி ஒரு தனிச் சிங்கள நாட்டை உருவாக்குவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையை புதிய அரசியல் சட்டம் உருவாக்கிவிட்டதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். சிறுபான்மை இனத்தினரை விழுங்கிவிடும் திட்டத்துக்கு இடதுசாரிகள் பெரிதும் பயன்படுவார்கள் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

''மே 22, 23' 24 ஆகிய மூன்று நாட்களிலும் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற மூன்று நாள் ஹர்த்தாலும், பகிஷ்கரிப்பும் சிறப்பான வெற்றியடைந்திருக்கிறது. பொறுப்பற்ற ஒரு சில காடைத்தனங்கள் நடந்திருந்தபோதிலும் — புதிய அரசியல் சட்டத்தை சரியாகவோ தவறாகவோ தமிழினம் முழுவதும் ஏற்கவில்லையென்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுதிமொழிகளாலும், துரையப்பா, குமாரசூரியர் போன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் ஆதரவாளர்களாலும் தமிழ் மக்களின் அரசியல் சிந்தனையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை......''

— "ட்ரிபியூன்" ( 30-5-72 )

## பெற்றோர் எச்சரிக்கை!

குடியரசை எதிர்த்து 22, 23, 24 ந் திகதிகளில் மாதகல் சஞ் சூசையப்பர் பாடசாலையை மாணவர்கள், மாணவிகள், பகிஷ்கரித்தனர். ஆளும் கட்சி அடிவருடியும் வி. பி. யின் வாலும் கல்வியமைச்சரின் நண்பருமான அதிபர் சிவஞானரட்ணம் 22ம் திகதி அன்று தேசியகொடியை ஏற்றமுடியாமலே மாணவர்கள் செய்து விட்டனர்.

அன்று பாடசாலைக்கு சென்ற சில ஆசிரியைகள் கறுப்பு நிறச் சாரி உடுத்து சென்றனர். அநேக ஆசிரியர்கள் வேண்டா வெறுப்பாக பாடசாலைக்கு சென்றனர்.

அதன் பின் 25ம் திகதி பாடசாலைக்கு சென்ற மாணவர், மாணவிகளிடம் சிங்களம் படிப்பதற்கு ஆதரவாக கடிதம் வாங்கி வரும்படி பிள்ளைகளை திருப்பி அதிபர் அனுப்பினார். ஆனல் அனேக பிள்ளைகள் மறுப்புத் தெரிவித்தும், உமக்கு யார் இந்த அதிகாரம் தந்தது என்று மிகவும் துணிவாகவும் எழுதிச் சென்றனர்.

ஆனல் அதிபரோ அவர்களுடையமறுப்புக் கடிதங்களை பரிசிலனை செய்யாமலே சிங்கள ஆசிரியரைகொண்டு வருவதாக பிள்ளைகளுக்கு கூறி இருக்கின்றார்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம் கூட்டப்பட்டால் தன் குட்டு அம்பலமாகி விடும் என்ற பயத்தால் கூட்டத்தை கூட்டாமல் கடத்தி செல்கின்றார். இனியாவது கூட்டத்தை கூட்டாமல் விட்டால் பாடசாலையில் நிரந்தரமான படிப்பு நடைபெறுமலும் பல அசம்பாவிதங்களும் ஏற்படும் என பெற்றோர்கள் எச்சரித்துள்ளனர்.

## மக்கள் குரல்

## மூதூர் அரை அமைச்சரின் ஆணவப்பேச்சு!

''சிங்கள அமைச்சர்கள் இங்கு வந்தால் சுவர்களில் எதிர்ப்பு சுலோகங்கள் எழுதாதவர்கள் முஸ்லிம் சமூக அமைச்சர்கள் இங்கு வந்தால் மட்டும் திரும்பிப்போ என்கிறார்கள். தமிழரசார் இனியும் கல்வி மந்திரிக்கு கெடுதி செய்ய முயன்றால் நாட்டில் இரத்த வெள்ளம் ஓடும்'' என்ற தலைப்பில் மூதூர் அரை அமைச்சர் மஜீத் ஆற்றிய இன வெறியைத்தூண்டும் பேச்சை 15-5-72 வீரகேசரியில் கண்டோம்.

அரை அமைச்சரை பார்த்து கேட்கின்றோம். அவர் தன்னை ஒரு நெப்போலியனாகவோ அல்லது ஜுலிய சீசராகவோ நினைத்துக்கொண்டு இப்படி கூறினாரா? அல்லது தமிழர்களை அடக்கி ஒடுக்க தன் கைவசம் காவாலிப் படைகள் ஏதுவும் வைத்துள்ளாரா? என்ன மனத்துணிவில் தமிழர்களுக்கு இந்த சவாலை விடுத்திருக்கின்றார்.

தினவெடுத்த தோள்களும் நெப்போலியனை போன்ற நெஞ்சுறுதியும் அரவெடுத்த கைகளும் சாக்ரடீஸைப்போல நாவன்மையும் படைத்த மறக்குல தமிழர்களைப்பார்த்து இக்கேள்வியை கேட்பதற்கு எங்கிருந்து வந்ததையா உமக்கு இத்தனை தைரியம் உங்கள் சண்டித்தனத்தையும் வீரப்பிரதாபங்களையும் இஸ்ரேல் களத்தில் சென்று காட்டலாமே!

ஐயா அரை அமைச்சரே உமது இந்த சலசலப்பை கண்டு எந்த தமிழ்பேசும் மகனும் நடுங்கி ஒடுங்க போவதில்லை என்பதை ஞாபகபடுத்த விரும்புகின்றோம். அரேபியாவில் மழை பெய்தால் இலங்கையில் இருந்து குடை பிடிக்கும் குருட்டு தனமான அரசியல் வாதிகள் அல்ல எங்கள் தமிழரசார்.

''கண்கள் இரண்டையும் விற்று சித்திரம் வாங்கினல் கைகொட்டி சிரியாரோ''? பணம் பட்டம் பதவிக்காக மொழியையும் இனத்தையும் காட்டிக்கொடுத்து பதவியில் அட்டைபோல ஒட்டிக்கொள்பவர்கள் கொள்ளட்டும். வீன் ஜம்பமும் வீரபிரதாபங்களும் இன வெறியை தூண்டும் பேச்சும் பேசவேண்டாம் என்று சொல்லி வைக்கவிரும்புகின்றோம்.

கே. பி. நாதன்
எஸ். மயில்வாகனம்
கே. சோமன்
பி. வேலுசாமி
கே. சேகர்
எஸ். நடராசா
கே. கருணன்

ஏறுவூர்
5-6-72

## 'தினபதி செய்தி முழுப்பொய்'

''தமிழர் கூட்டணியின் மட்டக்களப்புக் கூட்டத்தில் நான் ஏதோ கேள்வி கேட்டதாகவும், அதற்கு தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் பதில் சொல்லாது மழுப்பியதாகவும் தினபதி 6-6-72 இதழில் வெளிவந்த செய்தி முழுப்பொய். தமிழர் போராட்டத்துக்கு திட்டங்கள் முறையாக வகுக்கப்படவேண்டுமென்றேன். அதற்கு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நாங்கள்திட்டம் வகுத்து வருகிறோம். நீங்களும் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினூடாக உங்கள் திட்டத்தை தாருங்கள் என்று சொன்னார். நடந்தது இது தான். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கரடிவிடவுமில்லை —நான் கேள்வி யென்ற முறையில் அங்கு எதையும் கேட்கவுமில்லை. தினபதி இம்மாதிரி சில்லறைச் சேட்டைகளை விடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்—

—இவ்வாறு திரு. அற்புதராசா குரூஸ் அவர்கள் சுதந்திரனுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

## விடுதலை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

**விளையாட்டு, கலை, கலாச்சார கழகங்கள்**

**நாடகமன்றங்கள்**

**உள்ளூராட்சி மன்றங்கள்**

இவையும், இன்ன பிறவும் ஒவ்வொரு போர்க்களங்களே!

**ஒத்துழையாமை, பகிஷ்கரிப்பு, எல்லாம் தமிழியக்கம்,**

**சிங்கள (ஆசிரியர்கள்) திணிப்புக்கு எதிர்ப்பு**

**கடையடைப்பு**

**கறுத்தக்கொடி — இவையெல்லாம் போர்க் கருவிகள்!!**

எவைஎவை எமது விடுதலையை துரிதப்படுத்துமோ அவையவை செய்யப்படல் வேண்டும். மற்றவை தவிர்க்கப்படல் வேண்டும்.

பொதுவுடமையாளர்களுக்கு ஒரு இலட்சிய வெறியுண்டு (அதைச் செய்கிறார்களா என்பது வேறு விடயம்) அதாவது 'புரட்சியை வளர்த்தல் (*Promote Revolution*)

எமக்கும் ஒரு இலட்சிய வெறியுண்டு — அதாவது விடுதலையை வளர்த்தல் (***Promote Liberation***) இதை நாளும் — பொழுதும் செய்வோம் வெல்வோம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணிச்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த கவிஞரை, கூட்டத்தில் [illegible]ச விடாமலேயே பொலீசார் கைது செய்தனர். பொலீஸ் ஜீப்பில் ஏறுவதற்கு முன்னர் கவிஞர் அவர்கள் அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களுக்கு கைகூப்பி விடை பெற்ற காட்சி அனைவரையும் புல்லரிக்க வைத்தது.

வவுனியா புகையிரத நிலையத்திலும் பெருந்தொகையான இளைஞர்களும் ஏனையோரும் கூடிநின்றுஉணர்ச்சி பொங்க வாழ்த்தொலி முழக்கி கைதியாகி கொழும்பு கொண்டு வரப்பட்ட கவிஞரை வழி அனுப்பிவைத்தனர். கவிஞர் புன்முறுவலுடன் அனைவருக்கும் கையசைத்து விடைபெற்ற காட்சி கண்களில் நீரை வருவிப்பதாக இருந்தது.

கவிஞரை சென்றுபார்ப்பதற்கு தமிழர் கூட்டணித் தலைவர்களும், ஏனைய அவரது நண்பர்களும் எவ்வளவோ முயற்சித்தும் பொலீஸார் அனுமதிக்க மறுத்து விட்டனர்.

### ஆனந்த விநாயகம் கைதானர்!

தமிழரசுக்கட்சி வண்ணார் பண்ணைக்கிளையின் செயலாளரும் துடிப்பு மிக்கஇளைஞருமாகிய திரு. ஆனந்தவிநாயகம் (வண்ணை — ஆனந்தன்) அவர்களும் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவிலைச் சேர்ந்த மூன்று இளைஞர்களும் யாழ். பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### 55 பேர் கைது!

அரசியல் சட்ட எதிர்ப்பு ஹர்த்தாலை யடுத்து வடபகுதியில் ஏற்கெனவே 55 பேர் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முதலில் கைது செய்யப்பட்ட 39 பேர்களது பெயர்களும் வருமாறு:—

(1) த. முத்துக்குமாரசாமி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(2) ஏ. என். தர்மராஜா, 120 பிரதான வீதி யாழ்ப்பாணம்.
(3) சி. பிரான்சிஸ், 55/1 மவுண்கார் மேல் வீதி குருநகர்.
(4) என். மனோகரன் 112, அரசடி வீதி கந்தர்மடம்
(5) என். கிறிஸ்டி, 9, பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம்.
(6) ஏ. வரதராஜா, 15. பீ. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை.
(7) எஸ். சிவாத்மன், 2 பீ. ஏ. தம்பி ஒழுங்கை வண்ணார்பண்ணை
(8) ஏ. யோகேஸ்வரன், 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம்.
([illegible]) ச. சற்குணநாதன், மானிப்பாய்.
(10) ந. ராம்குமார், மானிப்பாய்.
(11) பி. அற்புதநாதன், உரும்பராய் தெற்கு உரும்பராய்.
(12) ஏ. இரத்தினராசா, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
(13) பி. பி. வில்சன், 6, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(14) பி. இராஜேஸ்வரன், சூரியர் ரோட் கொழும்புத்துறை மேற்கு
(15) ரி. தனபாலசிங்கம், 155, கண்டி வீதி, அரியாலை
(16) கே. நாகேந்திரதாஸ், 151 கண்டி வீதி அரியாலை
(17) பி. இரவீந்திரன், 17, இலந்தைக் குளம் வீதி கொழும்புத்துறை மேற்கு.
(18) இ. துரைசிங்கம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(19) த. ஆனந்தமூர்த்தி மார்க்கட், கிளிநொச்சி
(20) த. கிருபானந்தமூர்த்தி கிளிநொச்சி.
(21) பொ. மாணிக்கவாசகர், பரந்தன்.
(22) ஞா. அருமைநாயகம், பரந்தன்.
(23) ஏ. நித்தியானந்தன் 23, ஐயனார்கோவில் வீதி வண்ணார் பண்ணை.
(24) ஜே. எப். எக்ஸ். ஜெயசீலன், துணுக்காய்.
(25) எம். சின்னையா, ஜெயம் டெக்ஸ்டைல்ஸ் மல்லாவி.
(26) ஏ. கோபால், அனுஞ்செயங்குளம், மல்லாவி.
(27) ரி. சிதம்பரப்பிள்ளை, மல்லாவி, யோகபுரம்.
(28) ஏ. வடிவேல், மல்லாவி, யோகபுரம்.
(29) கே. செல்லையா, மல்லாவி, யோகபுரம்,
(30) என். தெய்வேந்திரன், மல்லாவி, யோகபுரம்.
(31) கு. சிவஞானசண்முகம் மல்லாவி, யோகபுரம்.
(32) எம். இராமன், நெல்குளம், வவுனியா.
(33) ஜி. ஞானேஸ்வரன், பூந்தோட்டம் வவுனியா.
(34) ச. பாண்டியன், நெல்குளம், வவுனியா.
(35) சி. விவேகானந்தன், 339/3 கோபாலலேன் வண்ணார்பண்ணை.
(36) என். சற்குணநாதன், 365, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(37) ஓ. பொன்னுச்சாமி, 43, சீனிவாசகம் ஒழுங்கை, கொட்டடி.
(38) பொ. வைத்திலிங்கம், வாரம்பற்றை, கோப்பாய் வடக்கு
(39) செபஸ்தியன்.

## வடக்கே மேலதிக இராணுவம் குவிப்பு!

வட பகுதிக்கு மேலதிக இராணுவ வீரர்களை அரசாங்கம் அனுப்பிவைத்துள்ளதுடன் பொலீசாருடன் சேர்ந்து இராணுவத்தினரும் ரோந்துபுரிய ஆரம்பித்திருக்கிருர்கள். இதனல் சாதாரண பொது மக்கள் நிம்மதியாக நடமாடமுடியவில்லை யென்றும், இரவு எட்டு மணிக்கு மேல் தெருவில் காணப்படுவோர் தாக்குதலுக்குள்ளாக்கப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## திருமலையில் பொலிசார் வேட்டை

புதிய அரசியலமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றத்தின் பேரில் திருமலை வாலிபர்கள் பலர் போலிசாரால் தேடப்பட்டு வருகிருர்கள். சிலரைப் போலிசார் கைது செய்துள்ள போதிலும் பலர் இன்னமும் போலிசார் கைக்கு அகப்படவில்லை.

தேடப்பட்டு வருபவர்களில் போலிசாரின் பார்வைக்கு முக்கிய இலக்கானவர்கள் இலங்கைத் தமிழணி இயக்கத்தைச் சேர்ந்தவர்களேயாவர். ஒரே நாளில் இலங்கைத் தமிழணி இயக்கத்தவரின் வீட்டிலும் மற்ருேர் உறுப்பினர் வீட்டிலும் இரவில் புகுந்த ஆயுதந் தாங்கிய இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொலிசார் தேடுதலுக்காளானவர்கள் எவரும் கிடைக்காததால் இருவரது பெற்ருேர்களையும் பயமுறுத்திச் சென்றுள்ளனர். இலங்கைத் தமிழணி இயக்கத் தலைவரின் தாய் தந்தையர் இருவரினதும் மார்பில் துப்பாக்கியை அழுத்தியபடியே சுடப்போவதாகப் பயமுறுத்திச் சென்றனர் என்று சொல்லப் படுகிறது.

மற்றும் இலகைத் தமிழணி இயக்க உறுப்பினர்கள் பலரையும் அவர்களோடிணைந்த வாலிபர்கள் பலரையும் திருமலை போலிசார் தீவிரமாகத் தேடிவருகிருர்கள்.

---

## புதிய அரசியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் தராதது மிகவும்வருத்தத்துக்குரியது. ஏற்கனவே இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் குற்றுயிராக உள்ளது. இவையெல்லாம் ஜனநாயக அபிமானிகளை விசனத்தில் ஆழ்த்தும் அம்சங்கள்.

தமிழருக்கு புதிய அரசியலமைப்பு திருப்தியும் நியாயமும் அளிப்பதாகசொல்வதற்கில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துக்கு சமமான அந்தஸ்தைத் தமிழுக்கு வழங்கவேண்டும் என்பதே தமிழரின் நியாயமான விருப்பம். அதைப் புறக்கணித்திருப்பது துர்ப்பாக்கியவசமானது. சிறுபான்மையினரை இருவகையாகப்பிரித்து, அதில் ஒரு வகையினரின் பிரஜாவுரிமையை ரத்துச்செய்வதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் தந்திருப்பதால் பலவிதஅநீதிகள் விளைய இடமுண்டு என்ற கவலை ஏற்படுகிறது.

புதிய சாசனம் அமுலானவுடன் இன்றைய பிரதமர் பொதுத் தேர்தல் நடத்திப் புதிய பிரதிநிதி சபையைத் தேர்ந்தெடுக்க வகை செய்யாமல், இப்போது உள்ள சர்க்காரின் ஆட்சியையே மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்திருப்பது ஜனநாயக ஆட்சி முறைக்கு அழகல்ல.

''தமிழரின் உரிமைகளை அவர் பூரணமாக மதித்து, அனைவரையும் அரவணைத்துப் போனல்தான் புதிய குடியரசு செழித் தோங்க முடியும். சகல மக்களிடையேயும் அன்பும் ஐக்கியமும் தழைப்பதே பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் என்பதை உணர்ந்து ஸ்ரீலங்காவின் அரசு செயல்பட வேண்டும் என பெரிதும் விரும்புகிறோம்.''

# காசி ஆனந்தன் கைது; வவுனியா இளைஞர் துடிப்பு!

உணர்ச்சிக் கவிஞர், தன்னலமற்ற தமிழன் நலம் கொண்ட — தியாகி காசி ஆனந்தன் மன்ருரில் கைது செய்யப்பட்டு வவுனியா நகர் பாதுகாவலர் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். என்னும் செய்தி வவுனியா மாவட்டம் முழுவதும் 11ம் திகதி காட்டுத் தீ போலப் பரவியது. இச்செய்தி கேட்டதும் பெரியோர்கள் பொங்கியெழுந்தனர். தாய்மார்கள் கண் கலங்கினர். இளைஞர்கள் பொறுமை இழந்து பொங்கியெழுந்து துடித்தனர்.

இளைஞர்களின் உணர்ச்சித் துடிப்பை சாந்தமாக அடக்குவதில் வவுனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு, உடுவில் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோருக்குப் பெரும்பாடாகி விட்டது.

இளைஞர் கூட்டமே நகர் காவல் நிலையத்திற்குப் படையெடுத்து காசி ஆனந்தனைப் பார்க்கத் திரண்டது. ஆனல் அவரைப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டது. அப்படியிருந்தும் வவுனியா மாவட்ட தமிழரசுக் கிளையின் முன்னாள் செயலாளர் திரு. சுந்தரலிங்கம், திரு. குணம், திரு. சிப்பிரியான் ஆகியோர் ஒருவாறு சென்று அளவளாவினர்.

வவுனியாவில் கடமை புரியும் இ. போ. ச. சாரதி ஒருவர் காசி ஆனந்தனைக் கண்டதும் கதைக்க முடியாது கதறி அழுதார். நெடுங்கேணி திரு. பீற்றர் பொன்கலன் பொலிசாரின் அனுமதி பெருமலே பொலிஸ் நிலையத்தினுள் நுழைந்து காசி ஆனந்தனைக் கட்டித் தழுவி கண்ணீர்விட்டு உரையாடினர்.

பொலிஸ்காரர் —சந்திக்க முடியாது என வெளியே போகும்படி கூறியதும் ''நீங்கள் செல்லும் இடத்திற்கு நாங்களும் வர காத்திருக்கின்ருேம் அண்ண'' எனக் கூறி விடைபெற்ருர்.

## விஸ்வநாதன் பதவியை உதறினர்!

தமிழர் கூட்டணி பிரமுகரும் வழக்கறிஞருமான திரு. ஆர். விஸ்வநாதன், புதிய அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக தமது சமாதான நீதவான், உத்தியோகப்பற்றற்ற நீதவான், ஆகிய இரு பதவிகளையும் துறந்துள்ளார்.

வழக்கறிஞர் சு. நடராசா அவர்கள் முதலில் இப்பதவிகளை தமிழரசு சிறப்பு மாநாட்டில் வைத்து துறந்ததும், அதைத்தொடர்ந்து, திருவாளர்கள் வழக்கறிஞர் இராசநாயகம், வ. நடேசலிங்கம் ஆகியோரும் தங்கள் சமாதான நீதவான் பதவிகளை தூக்கியெறிந்ததும் தெரிந்ததே.

## தமிழர் கூட்டணி பா. உ. க்கள் அறிவிப்பு!

''தேசியப்பேரவைக்கு செல்வதா இல்லையா என்பது பற்றி தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு எடுக்கும் தீர்மானப்படியே நாம் அனைவரும் நடப்போம். இதுபற்றி நாளேடுகளில் திட்டமிட்டு வேண்டுமென்றே வெளியிடப்படும் கற்பனைச்செய்திகளை யிட்டு தமிழ்மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்—''

—இவ்வாறு தமிழர் கூட்டணியின் பா. உ. க்கள் 13பேரும் கூட்டாக சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## இளைஞர்களுக்கு காணி

முத்துஐயன் கட்டு திட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு காணிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை வவுனியா அரசாங்க அதிபர் கோரியுள்ளார். காணிகளுக்கு விண்ணப்பிப்போர் 24-6-72க்கிடையில் தங்களது விண்ணப்பங்களை அரசாங்க அதிபர், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேற்படி காணிகளுக்கான காணிக்கச்சேரி 7-ம் மாதம், 6-ம் 11-ம், 13-ம், 14-ம் திகதிகளில் ஒட்டுசுட்டான் கூட்ட அலுவலகத்தில் நடைபெறும், இடதுகரை படித்த வாலிபர் திட்டம், வலதுகரை 1-ம், 2-ம், 3-ம் படித்த வாலிபர் படிவங்களிலேயே மேற்படி காணிகள் வழங்கப்படும்.

## மன்ருரில்...

(4.ம் பக்கத் தொடர்ச்சி)

ழர்களும் இப்பகுதிகளில் வந்து உழைக்க வேண்டும் என வேண்டுகொள் விடுத்தார்.

கடமை

''உன் கடமையை செய்ய முயல்க, அப்பொழுது உன் தகுதியை உடனே அறிந்து கொள்வாய்.''

—கதே.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரச பேரவைக்குச் செல்வதா - பகிஷ்கரிப்பதா?

**'தேசியப் பேரவையைத் தமிழ்ப் பிரதிநிதிகள் துறத்தல் வேண்டுமா?"**

மேற்படி பொருளில் சுதந்திரன் ஆசிரியத்தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்த கருத்துரைகள் ஆழமானவையாய், தர்க்கரீதியானவையாய், உணர்ச்சி வயப்படாமல் அறிவை அளவுகோலாய்க்கொண்டு அமைந்திருந்தன. தமிழ்ப் பிரதிநிதிகளைப் பதவி துறக்குமாறு வேண்டுபவர்களில் நல்லெண்ணமுடைய, உணர்ச்சித் துடிப்புள்ள வாலிபர் பல்லாயிரவர் உண்டு. ஆனால் அதே தருணத்தில் தமிழரின் விடுதலை இயக்கத்தை தப்பலவீனப்படுத்தித் தமிழ்த்தலைவர்கள் சிலரின் மதிப்பை மங்க வைக்கும் குள்ள நரிக் கூட்டமொன்று, உள்ளும் புறமும், பதவியைத் துறக்குமாறு வற்புறுத்தியும் வருகின்றது. ஆகவே, தமிழ்ப்பிரதிநிதிகள் அவசரப்படாது. ஆர அமரச்சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு வருதலே சாலச் சிறந்தது.

### விசுவாசப் பிரமாணஞ் செய்தல்

விசுவாசப் பிரயாணஞ் செய்தல் அர்த்தமற்ற சிறுபிள்ளை விளையாட்டாகும். (Mockery). இது ஒரு மதச் சடங்கின் எச்சமாகும். கடவுள் நம்பிக்கையற்றவர்களும், அரைகுறையான நம்பிக்கையுள்ளவர்களும் எவ்வகை நம்பிக்கையை வைத்துச் சத்தியஞ் செய்கிறார்கள்? பூரணமான விசுவாசத்தோடு பிரமாணஞ் செய்கின்றனரா? உள்ளொன்று வைத்துப்புறம் பொன்று செய்கின்றனர். ஆகவே, எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் எதுவிதமான அச்சமுமின்றி விசுவாசப் பிரமாணஞ் செய்யலாம் என்பதே எனது திடமான கருத்தாகும்.

கடவுள் நம்பிக்கையற்ற அல்லது அரைகுறையான நம்பிக்கையுள்ள ஒரு கூட்டத்தார் கோரும் விசுவாச அறிக்கைக்கு ஏதாவது ஆன்மீக மதிப்பு உண்டா? அற்பமும் இல்லை. ஆகவே எதுவிதமான வெளிவேடமும் (Solemnity) இல்லாமல் விசுவாசப் பிரமாணஞ் செய்து தேசியப்பேரவையில் கலந்து கொள்வதே அறிவுடைமையாகும், இராசதந்திரமுமாகும்.

'மிகச்செய்து தம் எள்ளுவாரை நகச் செய்து நட்பினுள் சாப்புல்லல் பாற்று' என வள்ளுவரும் அகனென்று புறன் ஒன்றுதல் பகைவர் மாட்டாயின் நீதி நூல் முடிவு என்கிறார்.

இன்றைய நிலையில் நமது பிரதிநிதிகள் தேசியப் பேரவையில் எதனையுஞ் சாதிக்க முடியாது. அதற்காக அவர்கள் தேசியப் பேரவையைத் துறப்பதும் பேதமையாகும். தேசியப்பேரவையைத் துறந்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதால் ஏற்படக் கூடிய லாபம் என்ன? ஒன்றில் எவருமே போட்டியிடாத ஒரு நிலைமை உண்டாகவேண்டும். அல்லது எங்கள் பிரதிநிதிகள் போட்டியின்றித் தெரியப்படவேண்டும். இதற்கு எங்கள் தொகுதிகளோ, தொகுதி மக்களோ பக்குவம் அடையவில்லை. ஆகவே, பிரதிநிதிகள் பதவிகளைத் துறக்க வேண்டுமென்பது வீண் விசர் யோசனையாகும்.

ஒருவரும் போட்டியிடாத நிலை அல்லது போட்டியில்லாத்தேர்தல் நமது தொகுதிகளில் நிலவுமாயின் நாம் விடுதலை பெறச் சுய நிர்ணயஞ் செய்யக் கனிந்தவர்களாயிருப்போம். உண்மை நிலை அப்படியில்லாதிருக்கும் போது வீண் விழற் பேச்சில் பயன் என்ன? சில தலைவர்கள் தமக்கு வால் இல்லாமையால் பொறுமையில் மற்றவர்களின் வாலை அறுக்க அரும்பாடு படுகின்றனர்.

## ஒரு கருத்து

நமது பிரதிநிதிகள் தேசியப் பேரவையில் இருப்பதால் தமிழருக்குப் பாதகமான சட்டங்கள் தீவிரமாக நடைமுறைக்கு வரமாட்டா. தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் புகுத்தப்பட முடியாமலிருப்பது, சிங்களத்தை நூறுவீதம் தமிழர் தொண்டைக்குள் திணிக்க முடியாமலிருப்பது இத்தகைய பிரதிநிதிகள் இருப்பதாலாகும். குடியரசு தினம் அவர்களின் முயற்சியாலன்றோ தமிழர்களின் இழவு நாளாய் மாறியது. பிரதிநிதிகளுக்கு மக்கள் காட்டும் மதிப்பு பிரதிநிதியல்லாதவர்களுக்கு உண்டா?

ஒத்துழைப்புப் பேசுபவர்கள், பேச்சுவார்த்தைகளால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்கின்றனர். ஆனால் இந்தச் சிகிச்சை முன்னர் பலமுறை கையாளப்பட்டுக் கண்ட பலன் என்ன? எங்கள் தமிழ்த் தலைவர்கள் 'இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து' என்ற குறளைப்படிக்கவில்லை. அப்படிப் படித்திருந்தால் நாங்கள் இப்படித் துன்பப் படவேண்டியதில்லை. மரம் முதிர்ந்து முள்ளுகளும் பலங் கொண்டபின், பொறுத்திருங்கள் பேச்சு வார்த்தைகளால் தீர்க்கலாம்' என்று மக்களைத் தாலாட்டுந் தலைவர்களைத் தமிழ் அன்னை ஏன் ஈன்றாள்?

உண்மையில் ஈழத் தமிழரின் விடுதலைப் பேரணி 1972ம் ஆண்டு மே மாதம் 22ஆந் திகதி தொடக்கி வைக்கப் பட்டுள்ளது. எங்களுடைய அறப்போராட்டத்துக்கு நமது பிரதிநிதி தேசியப் பேரவையில், வெறுங் காவல் நாய்கள் போலாவது இருப்பது இன்றியமையாததாகும். மக்களும், மாணவர்களும் உமிழ்ந்து கொண்டிருக்கும் நெருப்பை அவியாமல் காப்பதும் அவர்கள் கடனாகும். எங்கள் பிரதிநிதிகள் தேசியப் பேரவையிலிருந்து வெளியேறினால் துரோகிகள் பெருகுவார்கள் தலைவர்கள் செல்லாக் காசாகி விடுவார்கள். அப்பொழுது விடுதலை வேட்கை நூர்ந்து தமிழர்களும் அழிந்துபோவார்கள்.

தேசியப்பேரவைக்கு வெளியே செய்யவேண்டியவற்றை விரிவாகத் தீட்டித் தந்தால் ஆயிரக்கணக்கான தொண்டர் உயிரை ஈந்தாவது தமிழ் ஈழத்தையும் தமிழ்மொழியையும் காப்பாற்றத் துடித்துக்கொண்டிருக்கின்றனர். தேசியப்பேரவையைத் துறக்க இன்னுங் காலம் கனியவில்லை என்பதே என் தாழ்மையான கருத்தாகும்.

நீ. மே. யோ. வேதநாயகம்

## பகிஷ்கரிப்பு தொடரவேண்டும்!

புதிய அரசியலமைப்பின் கீழ் கூட்டப்படும் முதலாவது கூட்டத்தைப் பகிஷ்கரித்த நீங்கள் அதே அரசியலமைப்பின் கீழ் கூட்டப்படும் எல்லாக் கூட்டங்களையும்தொடர்ந்தும் பகிஷ்கரித்து தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்பைப் பூரணமாக வெளிப்படுத்த ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

—இவ்வாறு குறிப்பிட்டு கொழும்பு வாழ் தமிழர்கள் 57 பேர் கையொப்பமிட்டு 6, சர்வதேச பௌத்த மத்திய வீதி கொழும்பு-6 இலிருந்து ஒரு வேண்டுகோளை தமிழரசுப் பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ளனர்.



கொழும்பு நவரங்கலா மண்டபத்தில், தென் இந்திய நாட்டிய மேதை திரு. கே. என். தண்டாயுதபாணியின் மாணவிகளும், சினிமாஸ் லிமிடெட், விஜயாஸ் ஸ்டுடியோ, கே. ஜீ. இன்டஸ்றீஸ் ஆகிய ஸ்தாபனங்களின் உரிமையாளர் திரு. கே. குணரத்தினம் தம்பதிகளின் புதல்விகளுமான செல்விகள், பிரியதரிசினி—சரோஜினி குணரத்தினம் ஆகியோர்களின் நடன அரங்கேற்றத்தின் போது பிடிக்கப்பட்ட படங்கள், படத்தில், தலைமை வகித்த சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்னு தம்பதிகளுடன் பிள்ளைகளின் தந்தை திரு. குணரத்தினம் உரையாடிக் கொண்டிருக்கின்றார். அடுத்து சகோதரிகளின் நடனத்தோற்றம், செல்வி சரோஜினிக்கு சினிமாஸ் லிமிடெட் ஜெனரல் மனேஜரின் மகள் செல்வி அம்பலவாணர் பூச்செண்டு கூடை கையளிப்பதையும், சினிமாஸ் லிமிடெட் எஞ்சினியரின் மகன் செல்வன் தேவகுமரர் ராசதுரை பூக்கூடை ஒன்றை சிரித்த முகத்துடன் கொடுப்பதையும் படத்தில் காண்க.

—படம் கிங்ஸ்லி எஸ். செல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17)



## தமிழ்த் தெய்வத்தின் சந்நிதியில்....!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

காலை இளந்தென்றல் காற்று ஜிலு ஜிலு வென்று குளுமையைத்தர — திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள அண்ணன் சமாதியை நோக்கி காரில் சென்று கொண்டிருந்தோம்.

சென்ற தடவை (1971) பொதுத்தேர்தல் சமயத்தில் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் நானும் சென்னை வந்திருந்தபோதும், அண்ணா சமாதிக்கு சென்று அஞ்சலி செலுத்தியது என் நினைவில் வந்துநிழலாடியது. எத்தனையோ தாய்மார்கள், அண்ணன் சமாதியை சுற்றிவந்து கண்ணீர் விட்டழுதபடியே பூப்போட்டுஅடியழித்துவணங்கியதைக்கண்டு அப்போது மெய் சிலிர்த்திருக்கிறேன். ஆம், அந்த அளவுக்கு சாதாரண மக்களின் மனிதராக மக்கள் இதயங்களில் குடியிருப்பவராக அண்ணா இன்று மாறிவிட்டார்.

**கோவை-மகேசன்**

வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கு வருகைபுரியும் அரசியல் தலைவர்கள், இராசதந்திரிகள், அறிஞர்கள், கல்விமான்கள் யாராக இருந்தாலும், அண்ணா சமாதியில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திடுவது இன்று ஒரு வழமையாகிவிட்டது. இதில் ஆச்சரியப்படுவதற்கென்ன இருக்கிறது? தமிழ் நாட்டின் அடிநாதமாக இன்று திகழ்ந்திடுவது அண்ணா என்ற நாமம் தானே!

வங்கக்கடற்கரையின் ஓரத்தில், அமைதிதவழும் சூழலில், அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் சமாதிக்கு 30இலட்சம் ஈழத் தமிழர்களின் தலைவரான பெரியவர் செல்வா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவது உலகத் தமிழர் வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சி தானே! அந்த நிகழ்ச்சியின் போது நானும் உடனிருந்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

பாதரட்சைகளை கழற்றி வைத்துவிட்டு வெறும் காலுடன் புனிதமான கோவிலுக்குள் செல்வது போல— அண்ணா சமாதியை நோக்கி நடந்து, சென்றோம். தந்தை செல்வாவுடன் தளபதி அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி, நீல நாராயணன், முரசொலி அடியார் இரா. சனார்த்தனம், இராசரத்தினம் ஆகியோரும் மற்றும் சில நண்பர்களும் அண்ணன் சமாதியில் கண்ணீர் மல்க நின்றபடி அஞ்சலி செலுத்தினர்.

நானோ ஓர் ஓரமாக நின்று என் இதயம் வெம்பி அழ ''எதையும் தாங்கும் இதயத்துக்கு'' எனது அன்பக் காணிக்கையாக்கினேன்.

அண்ணாவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தியதால் புதிய தெம்பைப் பெற்றுக் கொண்ட நாம், அடுத்து நுங்கம் பாக்கத்தில் உள்ள அண்ணா குடியிருந்த வீட்டுக்குப் போகிறோம்.

சின்னஞ்சிறு வீடுதான் அது. அந்த வீட்டின் தோற்றமே அண்ணா முதலமைச்சரான பின்கூட எவ்வளவு எளிமையுடன் வாழ்ந்தார் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. அமெரிக்காவில் தமக்கு ஏற்பட்ட கொடிய நோய்க்கு அறுவை சிகிச்சை செய்தபின்னர், டாக்டர்கள் அண்ணாவை குளுமையூட்டப்பட்ட வீட்டில் வசிக்கும்படி ஆலோசனை கூறினார்கள் அல்லவா? அந்த நிலையிலுங்கூட அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, இதே நுங்கம் பாக்கம் வீட்டிலேயே சாதாரண மனிதனாக, மக்களில் ஒருவராக, இறுதிவரை வாழ்ந்தவர் அறிஞர் அண்ணா.

அண்ணா இருந்து வாழ்ந்து, எத்தனையோ அற்புதசாதனைகளைப் புரிந்த அந்த வீட்டினுள்ளே நுழைகின்றோம். உள்ளே காலடி எடுத்து வைக்கும்போதே மெய் சிலிர்க்கிறது. அண்ணா இருந்தபோது அந்த வீடு எப்படி திமிலோகப்பட்டிருக்கும்? கலகலப்புடன் இருந்திருக்கும்! இப்போது எப்படி வெறிச்சோடிக்கிடக்கிறது?

அண்ணாவின் மூத்த மருமகள் திருமதி சரோஜா பரிமளம் எங்களை மெத்த அன்புடன் வரவேற்கிறார். அண்ணாவின் பேரப் பெண் எங்களைக் கண்டு மிரள மிரள விழிக்கிறாள். அவளது கன்னத்தில் ஒரு செல்லத்தட்டு தட்டிவிட்டு அவ்வீட்டிலிருந்த ''கோவிலுக்குள்'' நுழைகிறோம்.

ஆம், அந்தஅறை ஒருகோவில்தான்! அங்கு புன்னகை பூத்தபடி காணப்படும் அண்ணாவின் பெரிய படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதற்கு சந்தனமாலை சூட்டப்பட்டிருந்தது. அப்படத்தின் முன்னால் அண்ணா பயன்படுத்திய பேனா, பொடி டப்பா, மூக்குக்கண்ணாடி, காலணி போன்ற பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றோர் ஓரத்திலே அண்ணா படித்த நூல்கள் அத்தனையும் ஒரு அலமாரியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

கண்களை மூடி அந்தத் தமிழ்த் தெய்வத்துக்கு வணக்கம் செலுத்துகிறோம். அங்கிருந்து வெளியேறும் போது அவர் பயன்படுத்திய காலணியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளுகிறேன். திருமதி. மங்கையர்க்கரசியும் அந்த மேதையின் காலடிபட்ட காலணியைத் தொட்டு கண்களில் ஒற்றி வணங்குகிறார்கள்.

திருமதி சரோஜா பரிமளத்திடமிருந்து விடைபெற்று நுங்கம் பாக்கத்திலிருந்து இப்போது புறப்படுகிறோம் — அடுத்து அண்ணா ''குடியிருந்த கோவிலைப்'' பார்க்க காஞ்சி மாநகரம் நோக்கிப் போவோமா?

---

## தமிழுரிமை பறிமுதல் பூரணத்துவம் பெற்றது!

''புதிய அரசியல் திட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த மனவேதனையும் வெறுப்பும் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே.

இதையாரும் மறுக்க முடியாது. தமிழ் மக்களின் உயிரிலும் மேலான அவர்களது தெய்வத் தமிழ் மொழிக்குப் புதிய அரசியல் திட்டம் உரிய மதிப்பும் மரியாதையும் அளிக்கவில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பமான தமிழ் மக்களின் மொழியுரிமைப் பறிமுதல் படலம் புதிய அரசியல் திட்டத்தில் பூரணத்துவம் பெற்றுவிட்டது.''

—வீரகேசரி (ஆசிரியத் தலையங்கம் — 22-5-72)

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்



நல்ல உடல் இருந்தால்தான்
வாழ்க்கையை இனிது அனுபவிக்கலாம்.

இழந்த சக்தியை மீட்டுத்தந்து மீண்டும் இளமைப் பூரிப்பை
அளிக்கவல்ல அற்புதமானதொரு அபூர்வ சஞ்சீவி

மதன சஞ்சீவி லேகியம்

ஜீவ தாதுக்களின் பலவீனத்தைப் போக்க சிறந்த ஔஷதம்.
வெளிப் பூச்சு மருந்து விலை ரூபா 5-50.

மதனலேபனம்

சித்த மருத்துவ பண்டிட் — கா. சிவசுப்பிரமணியம் M.I.H.S.M.P

முருகானந்தா வைத்தியசாலை

104 செட்டியார் தெரு
கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்)
லிடோ (யாழ்நகர்)

சிவாஜி ஜெயலலிதா
இணைந்து நடித்த முதல் வண்ணப்படம்
பாலாஜி—நிர்மலா—லட்சுமி
சோ—தேங்காய் சீனிவாசன்
குழந்தை நட்சத்திரம்
மாஸ்டர் பிரபாகர்
உட்பட பன்னிருவர் நடித்த
ஜேயார் மூவிஸ்

# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)

---

இப்பொழுது காட்சியளிக்கிறது

கொழும்பில் கடைசித் தடவையாக **செல்லமகால்**

சிவாஜிகணேசன் - சாவித்திரி
கே. பி. சுந்தராம்பாள் டி. ஆர். மகாலிங்கம்
நாகேஷ் நடித்த ஏ. பி. நாகராஜனின் வண்ணப்படம்

# திருவிளையாடல்

---

4வது வாரம்

கெயிட்டி (கொழும்பு) வின்சர் (யாழ்நகர்)

கே. ஆர் விஜயா
ரவிச்சந்திரன் நாகேஷ்
ரி. கே. பகவதி நடித்த




---

சிலோன் என்டடெயின்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கிறது



12வது வாரம் செண்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, பாலாஜி,
சந்திரபாபு, சுந்தரராஜன், ரங்கராவ்,
நாகையா, ராகவன், பண்டரிபாய், மனோகர்

நடிக்கும் சுஜாத்தாவின்

# ராஜா

(ஈஸ்மன் கலர்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட். ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 197‍ வருடம் ஜூன் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org